www.tamilarangam.net

தமிழீழ மக்கள் கட்சி

சுதந்திரம் — சமத்துவம் — தமிழீழம்

தமிழீழ மக்கள் கட்சியின் அரசியல் ஏடு

# தமிழீழம்

மக்களுக்கே அனைத்து அதிகாரங்களும்

கார்த்திகை 1999

இதழ்— 8

"...தன்னை ஜனாதிபதியாக தெரிவு செய்தால் 30 நாளுக்குள் இனப் பிரச்சினையை தீர்ப்பதாக சந்திரிக்கா சொல்றார். ஏன் இந்த ஐந்து வருடங்களும் காணாதாமோ..."

# போர்க்கள வெற்றிகளை தேசத்தின் அரசியல் வெற்றிகளாக்குவோம்!

ஓயாத அலை - 3 வெற்றியை நமது மக்கள் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் மிகவும் வெளிப்படையாகவும், மற்ற பிரதேசங்களிலுள்ள தமிழ் மக்கள் மனதிற்குள்ளும் கொண்டாடுகின்றனர். இந்த வெற்றியானது, ஒட்டுமொத்த தமிழ் தேசத்தின் வெற்றியாகும் என்பதை புலிகளும் கூட ஒப்புக்கொள்ளத் தவறவில்லை.

இதுவரை விடுதலைப்புலிகள் அடைந்த பல போர் வெற்றிகளைக் காட்டிலும், இந்த வெற்றியானது பண்புரீதியில் மற்றுமொரு பாய்ச்சலைக் குறிக்கின்றது. விடுதலைப் புலிகளின் தரப்பில் மிகக் குறைந்த இழப்புகளுடன் எதிரிகள் மீது அடையப்பெற்ற இந்த வெற்றி குறித்து, ஈழத்தமிழர் மாத்திரமல்ல, சிறிலங்கா படையினரின் அடக்குமுறைகளை அன்றாடம் அனுபவித்து வரும், அனைத்து மக்களும் களிப்படைகின்றனர். இப்படிப்பட்ட மகத்தான வெற்றியை கொண்டாடுவதுடன் மட்டும், எவரும் நின்றுவிடலாகாது. மாறாக, தமிழீழக் குடியரசை அமைப்பதற்கான நீண்ட நெடும் பயணத்தில் இது மற்றுமொரு கட்டம் என்பதை புரிந்துகொண்டு, இப்போர்க்கள வெற்றிகளை தமிழ் தேசத்தின் அரசியல் வெற்றியாக மாற்றுவது நோக்கி நமது கவனத்தை குவித்து செயற்பட வேண்டியவர்களாக உள்ளோம்.

இவ்வெற்றிக்கு அடித்தளமாக குறிப்பாக விடுதலைப்புலிகளின் ஆற்றலும், பொதுவாக நமது தேசத்தின் மனித வளம் உள்ளிட்ட பல்வேறு வளங்களும் இருந்துள்ளன. படைக்கலங்களையும் மற்றும் பல இராணுவ தளவாடங்களையும் சேகரிப்பதிலும், பாதுகாத்து நகர்த்துவதிலும் மக்கள் தமது பங்களிப்பை செலுத்தியுள்ளனர். இதனையும் உள்ளடக்கி கடந்த மாதங்களில் வன்னி மக்களுக்கு பரந்தளவில் அடிப்படை போர்க்காலப் பயிற்சி வளங்கப்பட்டது என்பதையும் நாம் அறிவோம். இருந்தும், மக்களின் பங்களிப்பு என்பதை இன்னும் எவ்வாறு ஊக்குவிக்கலாம் என்ற ஒரு கேள்வி இப்போது எம்முன் எழுகின்றது.

போராட்டத்திலும், போராட்டத்தின் பலாபலன்களை பாதுகாப்பதிலும், புரட்சிகர மாற்றங்களை நிகழ்த்துவதிலும் மக்களின் ஒட்டுமொத்த சக்தி திரட்டப்படுவதை ஊக்குவிக்கும் விதத்திலும், மக்கள் தாமாக முன்வந்து மும்முரமாக பல்வேறு அரசியல் போராட்டங்களில் ஈடுபடுவதை யதார்த்தமாக்கும் விதத்திலும் வாய்ப்புகள் திறந்து விடப்படவும் உருவாக்கப்படவும் வேண்டும். இதற்கெல்லாம் அடிப்படையாக போராட்ட அமைப்புகளாகிய நாம், நமது சொந்த மக்களது அரசியல் மற்றும் ஜனநாயக உரிமைகளை நடைமுறைப்படுத்தி ஊக்குவிக்க வேண்டும். பணத்தை தந்தும், படைக்கலங்களை தூக்குவதுடன் மட்டும் மக்களை பார்வையாளர்களாக்கி விடும் மரபை முற்றிலுமாக நாம் கைவிட வேண்டும். ஒரு கட்டத்தில், நமது மக்களை நாமே அடக்குமுறைக்குள் கட்டிப்போட்டு வைத்திருப்போமானால், அதே மக்கள் எதிரிகளின் ஆக்கிரமிப்பிற்குள் இருக்கும் போது, அதனை எதிர்த்துப் போராட முடியாத அடிமை மனப்பாங்கில் இருந்து விடுபட முடியாத அவலத்திற்கு மக்களை தள்ளிவிடும் கைங்கரியத்தை நாமே செய்பவர்களாகின்றோம். இதற்கு மேல் மக்கள் போராடவில்லை என அலுத்துக்கொள்வதிலும் திட்டித்தீர்ப்பதிலும்

(தொடர்ச்சி 2இல்)

## தமிழகத்தில் ஈழப்பிரஜையின் கைதும் நாடுகடத்தலும்

நீலன் மரணத்துடன் தொடர்புபட்டவர் எனும் சந்தேகத்தில் எரிக் சௌந்தரநாயகம் எனும் இளைஞர் கைது செய்யப்பட்டிருப்பதாக கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. இவர் தமிழகத்தில் கைதுசெய்யப்பட்டு சிறிலங்கா உளவுத்துறைக்கு கையளிக்கப்பட்டார். தமிழக உளவுத்துறைக்கும் சிறிலங்கா உளவுத்துறைக்குமிடையே நிலவும் இந்த உறவுதான் நமது கவனத்தை ஈர்க்கும் அம்சமாயுள்ளது. தமிழக பொலிஸ் மற்றும் நீதிமன்ற முறைக்கு உட்படாது, மிகவும் இரகசியமாக இந்தக் கைதும் கையளிப்பும் நடைபெற்றுள்ளன. சிறிலங்கா அரசுக்கும் தமிழக உளவுத்துறைக்குமிடையே எத்தகைய உறவுகள் நிலவுகின்றன என்பதை இச் சம்பவம் வெளிச்சத்திற்கு கொண்டு வந்துள்ளது. இவ்வுறவுகள் தொடா பாக இரகசிய ஒப்பந்தங்கள் ஏதும் உண்டா? இதில் மைய அரசினதும் தமிழக அரசினதும் பாத்திரம் என்ன எனும் கேள்விகளை நாம் எழுப்ப வேண்டியுள்ளது. இவ்வாறு அரச மட்ட ஒப்பந்தங்கள் இல்லாத பட்சத்தில் தமிழக உளவுத்துறையானது தன்னிச்சையாக இம்முடிவை எடுத்திருக்குமாயிருந்தால் இதன் தார்ப்பரியம் பாரதூரமானது.

தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பாக இந்திய அரசு வெளிப்படுத்தும் எதிர்மறைகளை விட, இன்னுமொருபடி தீவிரத் தன்மையைத்தான் எரிக் சம்பவத்தில் தமிழக உளவுத்துறை வெளிப்படுத்தியுள்ளது. விடுதலைப் புலிகளின் நடமாட்டங்களை கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் சாமர்த்தியமற்ற சிறிலங்கா பொலிசும் உளவுத்துறையும் சம்பவங்கள் நடந்து முடிந்த பின்னர் துப்புத்துலக்குவதின் மூலமாவது தமது அதிகாரத்தைக் காப்பாற்றிக் கொள்ள விளைகின்றன. அதற்காக அவை

(தொடர்ச்சி 7இல்)

## மீண்டும் செய்தித் தணிக்கை!

கடந்த முப்பது வருடங்களாக, சிறிலங்கா அரசாங்கங்களின் ஆட்சிக்காலத்தின் பெரும்பகுதியானது அடக்குமுறை சட்டங்களின் கீழ்தான் நடைபெற்றுள்ளது என்பது நாம் அறிந்ததே. இதன் ஒருபகுதியாக கொலைக்கலாச்சாரமும், ஊடகவியலாளர்கள் மீதான அடக்குமுறைகளும் முனைப்படைந்திருந்த யூஎன்பி ஆட்சிக் காலத்தில் ஊடகவியலாளர்கள் மிகவும் துணிச்சலுடன் செயற்பட்டு சந்திரிக்கா ஆட்சி அமைப்பதற்கான அடித்தளத்தை இட்டனர். தான் ஆட்சியமைப்பதற்கு வழிவகுத்த இதே ஊடகவியலாளர்களை ஒழுக்க நெறியற்றவர்கள் எனவும் அவர்களுக்கு ஒழுக்கம் படிப்பிக்க வேண்டும், அல்லது ஒழுங்குநடவடிக்கை எடுக்க வேண்டும் என பின்னாட்களில் வரிந்து கட்டியது சந்திரிக்கா நிர்வாகம். கடந்த காலங்களில், தனது ஆட்சிமுறை சீர்கேடுகளை மறைக்க பல தடவைகள் ஊடகத் தணிக்கையை பிரயோகித்தும் வந்துள்ளது.

எப்படிப்பட்ட அட்டுழியங்களை புரிந்தேனும், இம்முறையும் ஆட்சியை பிடித்தே தீர்வது என சந்திரிக்கா நிர்வாகம் ஏற்கனவே தீர்மானித்துவிட்டது. அரசு சார்பு ஊடகத் துறைகளை இதற்கு பயன்படுத்துவது மட்டுமல்ல, தனது நிர்வாகத்தை விமர்சிக்கும் எந்தவொரு ஊடகம் மற்றும் ஊடகவியலாளர்களை வெளிப்படையாகவே வேட்டையாடத் தொடங்கிவிட்டது. இதற்கான இரகசிய திட்டங்களை ஏற்கனவே தீட்டியுள்ளது. இதற்கு வாய்ப்பாக தற்போதைய வன்னிப் போர்முனைத் தோல்வியை பயன்படுத்தி, அவசர கால விதியின் கீழ் ஊடகத் தணிக்கையை முழு அளவில் அமுல்படுத்துகின்றது.

போர்கள நிலவரங்கள் தொடர்பான செய்திகளை, தேசிய பாதுகாப்பு கருதி தணிக்கை செய்வது என்ற பெயரில், தனக்கு எதிரான அனைத்துவகை பிரச்சாரங்களையும் ஒடுக்கவும், ஊடகவியலாளர்கள் மீது சட்டபூர்வமாக அட்டுழியங்களை மேற்கொள்ளவும் சிறிலங்கா அரசு தீர்மானித்துள்ளது. இதற்கான அறிகுறிகள் ஏற்கனவே தோன்றி விட்டன.

ஊடகவியலாளர்களின் நிலையோ பரிதாபகரமானது. சமூக அக்கறையுடன் கூடிய மாற்று அரசியல் சக்திகள் இல்லாத போது, எப்போதும் நடப்பிலுள்ள அரசாங்கத்தின் அநியாயங்களையும் ஊழல்களையும் மோசடிகளையும் அம்பலப்படுத்தி, இதன் மூலம் முன்னாள் அடக்குமுறையாளர்கள் ஆட்சியை பிடிக்க வழிசமைத்து விடுவதை தவிர வேறேதும் செய்ய முடியாத நிலையிலேயே உள்ளார்கள்.

★

**எமது இலட்சியம் சுதந்திர தமிழீழம்**

www.tamilarangam.net

**போர்க்கள...** (1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அர்த்தமிருக்காது. இவைபற்றி, நமது அண்மைக்கால வரலாறு சிறந்த பாடங்களை நமக்கு கற்றுத்தந்துள்ளதையும் குறித்துக் கொள்வதுடன் அவ்வனுபவங்கள் தரும் படிப்பினைகளை உள்வாங்கி முன்செல்வோம்.

நமது அடுத்த முக்கிய கடமையானது, இந்த வெற்றியை நாம் சரியான முறையில் சர்வதேசமயப்படுத்துவதாகும். இது வீர சாகசங்களை பிரபல்யபடுத்தி நிதி திரட்டுவதுடன் நின்று விடாது, தேசத்தின் தொடர்ந்த அரசியல் வெற்றிக்கு உத்தரவாதம் தரும் திசையில் அமைய வேண்டும். இந்த வெற்றியானது சொந்த மக்களின் பல்வேறு ஆதரவு மற்றும் பங்குபற்றுதலுடன் அடையப்பெற்றது. இது ஆக்கிரமிப்புபடைகளுக்கு எதிராக சொந்த மண்ணின் மக்களது வெற்றி. எனவே இந்த மக்கள் தமக்கான சொந்த அரசை அமைக்கும் அனைத்துவகை தகுதிகளையும் பெற்றுள்ளனர். சர்வதேச நியதிகளிற்கு ஏற்புடைய விதத்தில் தனியான அரசை அமைக்கும் தகுதி எமக்கு உண்டு என சர்வதேசத்திற்கு முரசறைவதாக எமது பிரச்சாரங்கள் இருக்க வேண்டும். அனைத்துலக மக்களின் ஆதரவை நாம் கோரிப்பெறுவதை சாத்தியமாக்கும் விதத்தில் அமைய வேண்டும். இதற்கேற்ப நமது போராட்ட வழிமுறைகளும் முரணற்றதாக இருக்க வேண்டும். சம காலத்தில்சக தேசங்களின் பொது மக்களை கொடூரமாக பலி வாங்கும், அடக்குமுறைக்குள் வைத்திருக்கும், அவர்களின் வதிவிடங்களை விட்டு வெளியேற்றும் வழிமுறைகளை முழுமையாக கைவிட்டுவிட்டதாக நாம் பிரகடனம் செய்ய வேண்டும். இவ்வாறு செய்யாதிருப்பதானது, இன்று பெற்றுள்ள வரலாற்று முக்கியத்துவமிக்க வெற்றியை, அதன் முக்கியத்துவத்தை இழப்பதாகி விடும்.

ஓயாதஅலை 3 வெற்றியானது, சிங்கள பொதுமக்களுக்கும் சிறிலங்கா அரசுக்கும் முரண்பாடுகளை ஆழப்படுத்துவதை நோக்கியும், வறிய, விளிம்புநிலை சிங்கள படைவீரர்களுக்கும், மேட்டுக்குடி படைத் தலைமைக்கும் இடையே கடுமையான முரண்பாட்டை தோற்றுவித்துள்ளதையும் கணிப்பிட்டு, மேலும் இதனை நாம் ஆழப்படுத்தும் விதத்தில் தொடர்ந்து செயற்பட வேண்டும். எமது போராட்டத்தின் தார்ப்பரியத்தையும் நியாயத்தன்மையையும் நீண்ட கால நோக்கிலாவது சிங்கள தேசத்தின் பல்வேறுபிரிவினர் புரிந்து கொள்ளச்செய்யும் விதத்தில், எமது தந்திரோபாயம் மட்டுமல்ல மூலோபாயமும் தெளிவாகவும் முரணற்றும் இருக்க வேண்டும். கைது செய்யப்படும், காயப்பட்டு கிடக்கும் நிராயுதபாணிகளான சிங்களப்படையினரை கொன்று குவிப்பதன் மூலம் எதிரி அரசுக்கான சிங்கள மக்களின் ஆதரவை பலப்படுத்திவிடும் திசையில் நாம் செயற்படாதிருக்க வேண்டும். நாம் அடக்கப்பட்ட மக்களின் விடுதலைப்படை என்பதையும், நமக்கு பலிவாங்கும் வன்மம் கிடையாது என்பதையும் நடைமுறையில் தொடர்ச்சியாக நிரூபிக்க வேண்டும்.

நெருங்கிப்பார்த்தால், நமது மக்கள் சிறிலங்கா அரசுக்கெதிரான போராட்டத்தை ஆதரிக்கின்றனர். நேசிக்கின்றனர். பங்குபற்ற தயாராக இருக்கின்றனர் பங்குபற்றுகின்றனர். வெற்றிகள் அடையப் பெறும் போது களிப்படைகின்றனர். இருந்தும், கடந்த காலங்களிலும் தற்போதும் விடுதலைக்காக போராடும் அமைப்புக்களை ஆத்மார்த்தமாக நேசிக்க முடியாதவர்களாகவும் உள்ளனர். இந்த முரண் நகையை நாம் கவனிக்க வேண்டும். இப்படியான நிலையில் மக்களை வைத்திருப்பதற்கு முற்றிலும் போராட்ட அமைப்புகளான, நாங்களே காரணம் என்பதை இது நிரூபிக்கின்றது. எனவே இந்த போக்கிற்கு முடிவு கட்டி இன்றைய விடுதலைப் போராட்டமானது அதன் உண்மையான அர்த்தத்தில் மக்கள் போராட்டமாகவும், ஒரு சுதந்திரக் குடியரசை அமைப்பது நோக்கியும் உறுதியாக வளர்த்துச் செல்லப்பட வேண்டும். இதற்கு எமது போராட்டத்தில் மக்களின் அரசியல் பங்குபற்றுதலை அதிகரிக்கப்பண்ணுவதும் அதிகரிப்பை சாத்தியமாக்கும் விதத்தில், மக்களுக்குஅடிப்படை ஜனநாயக உரிமைகளை நடைமுறைப்படுத்துவதும் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பதும் முன்நிபந்தனையாகும்.

இவ்வகையான வெற்றிகளை எமது தேசம் கொண்டாடும் அதேவேளையில், இவ்வெற்றிகளுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் பங்களித்த மக்கள் பிரக்ஞைபூர்வமான அரசியல் போராட்டங்களில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்களைத் திறந்து விடுவதும், மக்கள் அமைப்பாக ஒன்று திரள்வதை நோக்கி வளர்த்து செல்வதும் விடுதலைப் போராட்ட அமைப்புக்களின் தலையாய கடமைகளில் ஒன்றாகவும் இருக்க வேண்டும். ★

**யுத்தத்தின்** (5ஆம் பக்கத் தொடர்ச்சி)

ற்றி பெற வேண்டும் என்ற அரசாங்கத்தின் நோக்கமோ அல்லது அரசாங்கம் முகம் கொடுக்கும் நெருக்கடிகளோ அல்ல. எம்மீது திணிக்கப்பட்டுள்ள ஆக்கிரமிப்பு யுத்தம் குறித்து தவறான மதிப்பீடு என்பது வெறுமனே எமது புரிதலுடன் தொடர்பான விடயம் அல்ல: மாறாக நமது தற்காப்பை, உயிர் வாழ்வை, தேச இருப்பை, இறைமையை சிதைத்து, அழிக்க கூடிய தவறான வியூகங்களை உருவாக்குவதற்கு காரணமாக அமைந்திருக்கினற, தவறான தந்திரோபாயத்தின் வெளிப்பாடு இது. சரணாகதி அரசியல் பாதையை தேர்ந்தெடுத்துள்ள சகல தமிழ் அரசியல் அமைப்புக்களும், சிறிலங்கா அரசாங்கத்துடன் தம்மை இணைத்திருப்பதற்கான தர்க்க நியாயத்தை, இந்த தவறான மதிப்பீட்டில், தவறான தந்திரோபாயத்தில் அடையாளம் காணமுடிகின்றதா? ★

# புதிய இந்திய அரசாங்கமும் நாமும்!

நமது தேசத்தின் மீதும் நமது தேசிய விடுதலைப்போராட்டத்தின் மீதும் இந்தியாவில் ஏற்படும் அரசியல் மாற்றங்கள் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இது தொடர்ச்சியானது. ஆகவே நமது தேசமானது இந்திய அரசுடனான உறவு குறித்து மிகவும் விழிப்புடன் என்றும் செயற்படவேண்டியது அவசியமான நிபந்தனையாக இருக்கின்றது.

முதலாவதாக நமது தவறான கணிப்புகளினால் ஏற்பட்ட பாதகமான விளைவுகளை கவனத்தில் கொள்ள வேண்டும். உதாரணமாக சிறிலங்காவின் ஜனாதிபதியாக சந்திரிகா பதவி ஏற்றபோது ஜனநாயகமான வழிமுறைக்கூடாக சந்திரிகா நமது பிரச்சினைக்கு நீதியான தீர்வொன்றை காண்பார் எனும் நம்பிக்கை நமது தேசத்தில் பெரும்பான்மையினரிடம் காணப்பட்டது.

இதுபோன்ற தவறான கணிப்பு ஒன்றை இன்றைய இந்திய அரசியல் தொடர்பாகவும் நாம் இழைக்கின்றோம் என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். பி.ஜே.பி. இந்து மத வெறி கட்சியென்றாலும் பிரதமர் வாஜ்பாயி ஒரு லிபரல்வாதி எனும் பொதுசன அபிப்பிராயத்தால் நாமும் ஈர்க்கப்பட்டுள்ளோம். வாஜ்பேயியின் லிபரல்தன்மை பி.ஜே.பி.யின் எல்லைகளைக் கடக்குமா என்பதே முதல் கேள்வி. அப்படித்தான் ஒரு தனிநபர் லிபரல்வாதியாக செயற்பட முயன்றாலும் அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் சமூக சக்திகள் அவரது தனிநபர் நடவடிக்கைகளுக்கு எவ்வளவு தூரம் அனுமதித்திடப் போகிறது? எனவே வாஜ்பாயி எனும் நபருக்கூடாக இந்திய அரசியலை பார்க்காது இந்திய அரச இயந்திரத்தை பின்னணியிலிருந்து இயக்கும் சமூக சக்திகளையும் அதிகாரப் பிரிவினர்களையும் கொண்டே இந்தியாவுடனான அரசியல் உறவுகளை நாம் தீர்மானிக்க வேண்டும்.

பிரதமர் வாஜ்பாயி அவர்களும் தனது பதவி ஏற்பின்போதான முதலாவது சொற்பொழிவிலேயே நமது நம்பிக்கைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார். பயங்கரவாதத்தை முற்றாக ஒழிப்பதற்காக செயற்படப்போவதாகவும் இதில் எந்தவிதமான விட்டுக்கொடுப்புகளுக்கும் இடமில்லை எனவும் அறிவித்துள்ளார். இவர் பயங்கரவாதம் என கூறுவதற்கான வரையறை என்ன என்பதை இந்திய அரசின் கடந்தகால மற்றும் நிகழ்கால நடவடிக்கைகளே நமக்கு தெளிவுபடுத்துகின்றன.

நமது பத்திரிகையின் மூன்றாவது இதழில் காஷ்மீர விடுதலைப் போராட்டம் தொடர்பாகவும் இதனை எவ்வாறு இந்திய அரசு நசுக்குகின்றது என்பதையும் கூறியிருந்தோம். இதுமட்டுமின்றி இப்போராட்டத்தை வெறும் எல்லைப் பிரச்சனையாக இந்திய அரசு குறுக்குவதையும் சுட்டிக் காட்டியிருந்தோம். இதேபோல் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி எவ்வாறு காலிஸ்தான் விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கு செயற்பட்டார் என்பதையும் அத்தேசத்தினது நம்பிக்கையையும் அவர்கள் புனித இடமாக கருதும் பொற்கோயிலையும் எவ்வாறு சிதைத்தார் என்பதையும் நாமறிவோம். இவ்வாறு இந்திய அரசானது தனது அரச கட்டமைப்பிற்குட்பட்ட தேசங்களின் விடுதலைப் போராட்டங்கள் மீது மோசமான அடக்குமுறையை பிரயோகிக்கிறது. தேசவிடுதலைப்போராட்டங்கள் மீதும் சமூக விடுதலைக்கான மக்கள் போராட்டங்கள் மீதும் தான் மேற்கொள்ளும் அடக்குமுறை நடவடிக்கைகளை பயங்கரவாதத்திற்கெதிரான நடவடிக்கையாக இந்திய அரசு சித்தரித்து வருகிறது. வாதத்திற் கெதிராக விட்டுக்கொடாது செயற்படப் போவதாக குறிப்பால் உணர்த்துகிறார்.

நமது விடுதலைப் போராட்டத்தின் வெற்றியானது தமிழகத்திலும் மற்றும் இந்திய அரசினால் அடக்கப்பட்டிருக்கும் ஏனைய தேசங்களினதும் சுயநிர்ணயத்தில் குறிப்பான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது மறுக்க முடியாது. இன்றைய தமிழக சூழல் இதற்கு சான்றும் பகர்கின்றது. தனித் தமிழகத்திற்கான கோரிக்கைகள் அங்கு எழுச்சி பெற்று வருகின்றன. இது தமிழக மக்களின் தமிழ்த் தேசிய உணர்வுகளில் நிச்சயம் பாதிப்பை ஏற்படுத்தத்தான் போகிறது. இதேவேளை தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வெற்றியானது தமிழக மக்களின் தமிழ்த் தேசிய உணர்வுக்கு மேலும் உந்துசக்தியாக அமையும். இதை இந்திய அரசு துளிதானும் விரும்பாது. எனவே தமிழீழ விடுதலைப்போராட்டத்தை முறியடிக்கும் வகையில் தனது பிராந்தியக் கொள்கையை இந்திய அரசு தொடர்ந்தும் கடைபிடிக்கும். அல்லது தனது ஆதிக்க நலன்களுக்கு ஏற்புடைய "தீர்வொன்றை" மறுபடியும் நம்மீது திணிக்க முயலும்.

இறைமைமிக்க சுதந்திரமான தமிழீழ குடியரசை நிறுவுவதே நமது இலட்சியம். இதற்குக் குறைந்த எந்த தீர்வுக்கும் நாம் உடன்படுவது இதுவரைகாலமும் நமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் நாம் கொடுத்துவரும் விலைக்கு ஈடாகாது. எனவே நமது அரசியலின் திசைவழியைத் தீர்மானிக்கும் அதிகாரத்தை நமது தவறான கணிப்புகளின் மூலம் ஆபத்பாந்தவர்களாக தம்மைக் காட்டிக்கொள்பவர்களிடம் தாரை வார்த்துவிடாது நமது சுயத்தில் தங்கி நிற்போம். ★



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழீழத்திற்கு தண்டனையா...? அச்சுறுத்தலா...???

ராஜிவ் காந்தி மரணத்துடன் தொடர்புபட்டவர்களாகக்கூறப்படும்நளினி, முருகன், சாந்தன், பேறிவாளன் ஆகிய நான்கு பேருக்கு இந்திய அரசு மரண தண்டனை விதித்துள்ளது. ராஜிவ் காந்தி மரணம் தொடர்பாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட புலன் விசாரணை அறிக்கைகளே இந்நடவடிக்கையில் இவர்களது பாத்திரம் என்ன என்பதை தெளிவுபடுத்துவனவாயுள்ளன. அப்படியிருந்தும் தான் விதித்துள்ள மரணதண்டனைதீர்ப்பில்இந்திய அரசானது இத்தனை தீவிரமாக இருப்பதன் காரணம் என்ன?

தமிழீழ விடுதலைப் போராட்டமானது தனது கட்டுப்பாட்டுக்குள் தனது நலன்களுக்கு சாதகமானதாக இருந்தவரை இந்திய அரசானது தமிழீழ போராளிகளை இந்தியாவில் சுதந்திரமாக செயற்பட அனுமதித்து வந்தது. ஈழப்போராட்ட அமைப்புகள் தமிழகத்து பெரு நகரங்களில் பகிரங்கமாக ஆயுதம் கொண்டு திரிந்ததையோ அல்லது அவை தமக்கிடையே ஆயுத மோதல்களில் ஈடுபட்டதையோ அது கண்டு கொள்ள வில்லை. வேற்று தேசத்தை சார்ந்த ஆயுதக் குழுக்கள் தமிழக மண்ணில் ஆயுதம் ஏந்தி திரிவதும் வன்முறைகளில் ஈடுபடுவதும் தமிழக மக்களது சிவில் வாழ்க்கைக்கு கேடு விளைவிக்கும் என்பதை இந்திய அரசு அறியாமலில்லை. மீனம்பாக்கம்குண்டு வெடிப்பு முதல்தமிழகப் பண்ணையார் ஒருவர் படுகொலை செய்யப்பட்டது வரையிலான ஈழப்போராட் அமைப்புகளின் வன்முறை நடவடிக்கைகளுக்கெல்லாம்இந்திய அரசு மௌனம் சாதித்தது. தமிழீழ விடுதலைப்போராட்டம் தனது கைகளை விட்டுப் போய் சுயாதீனமான போராட்டமாக பரிணமிக்கத் தொடங்கியதுடன் இந்திய அரசு விழிப்புற்றுக் கொண்டது. தன்னாதிக்கமும் இறைமையுமுடைய சுதந்திர தமிழீழம் இந்தியாவுக்கருகில் உருவாவதை தனது பூகோள அரசியலுக்கு - பிராந்திய வல்லாதிக்கத்திற்கு கேடாகக் கண்ட இந்திய அரசு ஈழப் போராட்டத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் மீளக் கொண்டுவரவும் முடியாவிடில் முற்றாக அழித்தொழிக்கவும் முடிவுகட்டியது. இதன் விளைவே இந்திய அரசினால் சிறிலங்கா அரசு மீதான நிர்ப்பந்தம்மற்றும்மறைமுக அச்சுறுத்தலினால் ஏற்படுத்தப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தமும் தமிழீழத்தின் மீதான இந்திய அரசின் நேரடி இராணுவ ஆக்கிரமிப்புமாகும். தனது கணிப்பீடுகளுக்கு மாறாக தமிழீழத்தில் தோல்வியுற்ற இந்திய அரசு முதற்கட்ட நடவடிக்கையாக தனது எல்லைக்குள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்கும் புதிய தந்திரோபாயத்தை வகுக்கத் தொடங்கியது. அதற்கு ராஜிவ் மரணத்தை அது சாதகமாகப்பயன்படுத்திக்கொண்டுள்ளது.

ராஜிவ் இந்திய ஆளும் வர்க்க அரசியலில்தீர்க்கமான பாத்திரம் வகிக்கக் கூடியவர் என்பதும் இந்திய ஆதிக்க குழுமத்தின் நலன்களைப் பாதுகாக்கும் ஆற்றலை ஒப்பீட்டளவில் கொண்டிருந்தவர் என்பதும் உண்மையே. ஆனால் ஒரு தனிநபரின் மரணத்திற்கு இந்திய அரசு வழங்கும் முக்கியத்துவத்தின் அளவு சர்வதேச அரசியலில் பிரமிப்பை ஊட்டுவதாகவேயுள்ளது. இதன் மறுபுறம் இந்திய தேச பிதாவாக வர்ணிக்கப்படும் காந்தி கொலைக்குப் பின்னாலுள்ள சதித்திட்டத்தின்வலைப்பின்னலைக்கண்டு பிடித்து அதற்குப் பொறுப்பானவர்களுக்கு தண்டனை வழங்குவதில் இந்திய அரசு இவ்வளவு தீவிரம் காட்டவில்லை என்பதை உலகே அறியும். ஆனால் இதற்கு மாறாக ராஜிவ் மரணத்திற்குப் பின்னாலுள்ள மூலவேர்களையெல்லாம் தேடிக் கொண்டும், ஈழப் போராட்டத்திற்கு ஆதரவு தந்த தமிழக அன்பர்களின் உறவினர்களைக் கூட தடுப்புக் காவல் விசாரணைக் குட்படுத்தியதிலிருந்தும்தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பான இந்திய ஆளும் குழுமத்தின் அரசியல் உணர்வுகளே புலப்படுகின்றன.

ராஜிவ் காந்தி மரணத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படுபவர்களுக்கு தண்டனை வழங்குவதில் காட்டும் தீவிரம், இதைக் காரணமாய்க் கொண்டு ஈழப் போராட்டத்திற்கு ஆதரவானவர்களுக் கெதிரான அச்சுறுத்தல், பொலிஸ் வன்முறை, தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கெதிரான தொடர்ச்சியான அரசியல் பிரச்சாரம்.... ஆகியவற்றின் மூலம் இந்திய அரசானது தமிழக மக்கள் ஈழப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்குவதை நிரந்தரமாக இல்லாதொழிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது.

அது மாத்திரமன்றி, இந்திய அரசின் நலன்களுக்கு எதிரான தேச விடுதலைப் போராட்டங்களுக்கெல்லாம் ஒரு எச்சரிக்கைக் குறியீடாகவும் இத்தூக்குத் தண்டனைத் தீர்ப்பை இந்திய அரசு பயன்படுத்திக் கொள்கிறது. தேசங்களின் பலவந்தமான ஒருங்கிணைப்பினாலேயே இந்தியமைய அரசும் அதனால்பயன்பெறும் ஆளுங்குழுமமும் உயிர்வாழ முடியும் என்பதை இப்பிரிவு தானே நன்குணர்ந்திருப்பதால், தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் நடவடிக்கைகளில் ஒன்றாக தேச விடுதலைப் போராட்டங்களுக் கெதிரான கடும் போக்கை கடைபிடிப்பதில் இந்திய அரசு குறியாயிருப்பதையே இது உணர்த்துகிறது. இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிந்தது, இந்திய எல்லையிலேயே பங்களாதேஷ் உருவானது போன்ற நிகழ்வுகள் இந்திய அரசினதும் ஆளுங்குழுமத்தினதும் இருப்பை அடிப்படையிலேயே கேள்விக்குள்ளாக்கியிருப்பதால், குறிப்பாக தனது வல்லாதிக்கத்திற்குட்பட்டுள்ள பிராந்திய எல்லைக்குள் நடைபெறும் தேசவிடுதலைப் போராட்டங்கள் பால் இந்திய அரசு இரும்புக்கையைபிரயோகிப்பதையேதனது அரசு கொள்கையாகக் கொண்டுள்ளது. காஷ்மீரம், காலிஸ்தான் உட்பட விடுதலைக்காகப் போராடும் தேச மக்களது அவலக்குரல்இந்திய அரசுவிரித்திருக்கும் இரும்புத்திரையைக் கிழித்துக் கொண்டு உலகின் செவிப்பறையில் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கிறது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற் கெதிரான இந்திய அரசின் தீர்மானங்களை நிறைவேற்றும் பொலிசும் அரசு அதிகாரிகளும் தத்தம் தனிப்பட்ட நலன்களிலிருந்து ஈழத்தமிழருக்கும்தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் எதிராக வெளிப்படையாகவே செயற்பட்டு வருவது கவனத்திற் கொள்ளப்பட வேண்டியது. தமது பதவியுயர்வு மற்றும் இன்னோரன்ன நலன்களை முதன்மைப்படுத்தி இப்பிரிவினர் ஈழப்போராட்டத்திற்கு ஆதரவான தமிழக மக்களையே துன்புறுத்துகின்றனர். ஈழத் தமிழரை தன்னிச்சையாகக் கைது செய்வது, சித்திரவரைகளுக்குள்ளாக்குவது, நிர்வாக அலுவல்களில் இழுத்தடிப்பது, லஞ்சம் வாங்குவது. . . . மாத்திரமன்றி, பொலிஸ் அதிகாரிகள் சிலர் தமிழக அகதிமுகாம்களில் தஞ்சமடைந்திருக்கும் ஈழத் தமிழர் மத்தியில் சென்றுஇளம்பெண்களை தம்முடன்பாலியல் உறவுகொள்ள நிர்ப்பந்திப்பதும், அவர்கள் மறுக்கையில் “ விடுதலைப்புலி “ எனக் குற்றஞ்சாட்டி சிறைக்கனுப்புவதுமான அட்டூழியங்கள் வரையில் இவர்களின் அடாவடித்தனங்கள் விரிவடைந்துள்ளன. தமிழகத்தில் தஞ்சமடைந்திருக்கும் ஈழத்தமிழருக் கெதிரான இந்திய பொலிசினதும், அரச அதிகாரிகளினதும் வன்முறையினால்தமிழக மக்கள்மத்தியில் ஈழப் போராட்டத்திற்கு பகிரங்கமாக ஆதரவு வழங்கும் போக்கு பின்தள்ளப்பட்டுள்ளது.

எனினும், இந்திய அரசுபிரஸ்தாபிப்பது போல் தமிழக மக்களின் சிந்தனை ஈழப் போராட்டத்திற்கு முற்றிலும் எதிரானதாக இல்லை. இந்திய அரச இயந்திரத்தின் அச்சுறுத்தலின் விளைவே ஈழத் தமிழர்களுடன் நெருங்குவதற்கு தமிழக மக்களைத் தடுக்கும் காரணியாக இருந்து வருகிறது. இதையும் கடந்து ஈழப் போராட்டத்தின்பாலான தமிழக மக்களின் கரிசனை வெளிப்படவே செய்கிறது.

கடந்த காலத்தில்ஈழத்தமிழருக்காக தமிழக மக்கள் கொந்தளித்து எழுந்ததும், ஈழத் தமிழர் துயரம் கண்டு தமிழக சகோதரர்கள் சிலர் தீக்குளிப்பு முயற்சியில் ஈடுபட்டதும் ஈழப்போராட்ட வரலாற்றில் என்றும் மாறா நினைவுகளாகும். தமிழீழ

(தொடர்ச்சி 7இல்)

## நான் தண்டனை கோருகிறேன்

நான்
அழுவதற்கு வரவில்லை-
அவர்கள்
விழுந்த இடத்தில்
இன்னமும்
உயிரோடு இருப்பவர்களே!
உங்களிடம் பேசத்தான்...
உங்களை நோக்கியும்
என்னை நோக்கியும்
நான்
வேண்டுவது இதுதான்...
இறந்துகிடக்கும்
நம்மவர்கள் பேராலே
கேட்கிறேன்...
தண்டனை அளியுங்கள்
நமது தந்தையர் நாட்டு
மண்மீது
சிவப்பு ரத்தத்தை
சிதற வைத்தவர்களுக்கு
தண்டனை அளியுங்கள்!
யாருடைய
ஆணையின் பேரில் இந்த
அக்கிரமங்கள் நடந்தனவோ
அந்த துரோகிகளுக்கு
இங்கேயே...
தண்டனை அளியுங்கள்!
இந்த சவங்களின் மீது
சிம்மாசனம் ஏறிய
அந்த துரோகிகளுக்கு
தண்டனை அளியுங்கள்!
மறப்பவர்களுக்கும்
இந்தக்கொடுமைகளை
மன்னிக்கச்சொல்பவர்களுக்கும்
தண்டனை கொடுங்கள்!
நான்
எல்லோருடனும்
கை குலுக்க விரும்பவில்லை
ரத்தக்கறைபடிந்த
கரங்களைத்
தொடுவதற்கே
விரும்பவில்லை
நான்
தண்டனை கோருகிறேன்!
தூர தேசங்களுக்கு
அவர்களை
தூதுவராய் அனுப்புவதை
அமைதிவரும்வரை
அவர்களை அறைகளில்
அடைப்பதை
நான்
அடியோடு விரும்பவில்லை.
இப்பொழுதே...
திறந்தவெளியிலே
நீதி வழங்குங்கள்!
அவர்களுக்குரிய
தண்டனையை
என்
கண் முன்னே
நிறைவேற்றுங்கள்...!

- பாப்லோ நெருடா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்கள் நேர்மறை பாகுபாட்டிற்குரியவர்களா?

நமது சமூகத்தில் பெண்கள் அனைத்துத் தளங்களிலும் அடக்கப்பட்டும், நசுக்கப்பட்டும், அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் இரண்டாந்தரப் பிரஜைகளாக நடாத்தப்பட்டு வருகின்றனர். பெண்களை அடக்கும் இவ்வாணாதிக்க முறைமையானது பொருளாதாரம், சாதியம், மதம், பிரதேசம் ஆகிய சமூகக்கட்டமைப்புகள் அனைத்திலும் தாக்கம் நிகழ்த்தி வருகிறது. இக்கட்டமைப்புகளில் ஆதிக்க நிலை வகிக்கும் ஆண்கள் முதல் அடக்கப்பட்ட நிலையிலிருக்கும் ஆண்கள் வரையில் தத்தம் சமூக அதிகார நிலைக்கேற்ப பெண்களை அடக்குமுறைக்குள்ளாக்குகின்றனர். இவ்வாறு ஆண்கள் பெண்களை அடக்குவதில் தமக்கிடையே பொதுத்தன்மையைக் கொண்டிருக்குமளவுக்கு ஆணாதிக்க சித்தாந்தமானது ஆண்களில் செல்வாக்கு செலுத்துகிறது. சமூக அளவில் அதிகாரம் பெற்றிருக்கும் ஆண்கள் தாம் ஆட்சி செலுத்தும் தளங்களுக்குள் பெண்கள் பிரவேசிப்பதற்கு இலகுவில் அனுமதிப்பதில்லை.இவ்வாறு தொழில் தளங்களில் போன்றே சமூக அதிகார மையங்களையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதில் ஆண்கள் குறியாயுள்ளனர்.

தமக்கு மறுக்கப்பட்டிருக்கும் சமூகத் தளங்களில் பெண்கள் ஆண்களுக்கு நிகராக செயற்படக் கூடிய தலைமைத்துவப் பண்பை, ஆளுமையை பெற வேண்டுமானால் அரசியலமைப்பின் மூலம் பெண்களது சமூக மேம்பாட்டுக்கு உத்தரவாதமளிக்கப் பட்டிருப்பதுடன் அரசானது தனது அனைத்து அபிவிருத்தித் திட்டங்களையும் பெண்களது அபிவிருத்தியுடன் பிணைந்ததாக முன்னெடுப்பது அவசியமாகும். இவ்வாறு பெண்களின் சமூக ரீதியான விடுதலையை, ஆளுமையை வளர்த்தெடுப்பதற்கு அரசு பெண்களுக்கான நேர்மறைப் பாகுபாட்டை அரசியல் திட்டத்திலேயே கொண்டிருக்க வேண்டும்.

பெண்களை அடக்கும், பெண்களை பாரபட்சமாக நடத்தும் சமூக அமைப்பில் பெண்களுக்கு விசேட சலுகைகளை ஏற்படுத்திடும் வழிமுறைக் கூடாகத்தான் பெண்கள் சமத்துவ நிலையை அடைய முடியும் என்பது யதார்த்தமாயுள்ளது. இதற்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இந்தியாவின் மண்டல் கமிஷன் திட்டம் சிறந்த எடுத்துக்காட்டாகும். பெண்கள் மற்றும் அடக்கப்பட்ட சமூகப் பிரிவினரின் சமூக ரீதியான விடுதலையில் நாம் அக்கறையுடையவர்களாய் இருப்போமானால் இப்பிரிவினரின் நேர்மறைப் பாகுபாட்டிலிருந்துதான் நாம் எமது சமூக அபிவிருத்திக் கொள்கையை வகுப்பவர்களாயிருப்போம்.

பெண்களுக்கான நேர்மறைப் பாகுபாடானது பெண்கள் நசுக்கப்பட்டிருக்கும் அனைத்துத் தளங்களிலும் கடைபிடிக்கப்பட வேண்டும். பெண் - ஆண் உழைப்புச் சக்தியில் காட்டப்படும் பாரபட்சத்தை இங்கு உதாரணத்திற்கெடுத்துக் கொள்வோம். பெண்களின் சமூக ரீதியான உழைப்பிற்கு ஆண்களதிலும்விட குறைவான கூலி வழங்கப்படுவது ஒரு சமூக நியமமாகவே ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பாதை-திருத்தும் பணியின் போது பெண்களும் ஆண்களும் ஒரேவிதமான வேலையில் ( மண்ணை வெட்டி அப்புறப்படுத்துதல்) ஈடுபடுகின்றனர். அவர்களின் வேலை நேரமும் சமனானனது. அப்படியிருந்தும் பெண்களுக்கு குறைவான கூலி வழங்கப்படுவதற்கு கூறப்படும் காரணம் பலவீனமான உடலைக் கொண்டிருப்பதால் பெண்கள் ஆண்களையும் விட குறைவாகவே மண்ணை வெட்டி அப்புறப்படுத்தியிருப்பர் என்பதாகும். உழைப்புச் சக்தியின் பிரயோகத்தை பொறுத்தவரையில் இரு பாலினத்தவரும் சம அளவு சக்தியையே இவ்வுழைப்பிற்கு உட்படுத்தியிருந்தும் இங்கு வேலையின் அளவைக் கொண்டு கூலி நிர்ணயிக்கப்படுகிறது. (ஆணுக்கு கூடிய கூலி வழங்கிடும் ஆணாதிக்க குடும்ப முறைமை மற்றும் போஷகர் பாத்திரம் என்பதும் இதில் தொழிற்படுவதையும் இணைத்தே பார்க்க வேண்டும்).

பல நூறாண்டுகளாக நீடித்து வரும் பால்நிலைப் பாகுபாட்டின் வழிப்பட்ட வளர்ப்பு முறையினாலும் வாழ்வியல் முறையினாலும் பெண்களது உடலமைப்பு ஒப்பீட்டளவில் ஆண்களதிலும் விட பலவீனமாயமைந்துள்ளது. இதன் காரணமாக பெண்கள் பாரமான பொருட்களை தூக்கும் கடின உடலுழைப்பில் ஈடுபடும் ஆற்றலை குறைவாகவே வெளிப்படுத்துகின்றனர். இந்நிலையில் பெண்களை இவ்வேலைகளில் ஈடுபடுத்துவது, அதற்கு வற்புறுத்துவது, உழைப்புச் சக்தி பிரயோகத்தை அதிகமாக எதிர்பார்ப்பது யாவும் அவர்களைத் துன்புறுத்துவதாகவே அமையும். பெண்களது உடலமைப்பில் மாறுதல்கள் ஏற்படும் வகையில் அவர்களது வாழ்வியல் முறையிலும் வளர்ப்பு முறையிலும் அடிப்படை புரட்சியை செய்வதன் மூலமே பெண்களும் வலுவான உடலைக் கொண்டிருக்கவும் அனைத்து விதமான கடின உழைப்பிலும் இலகுவாக ஈடுபடவும் இயலும். அதுவரையில் தமது உடல் வலுவுக்கு மிஞ்சிய வேலைகளில் ஈடுபடாதிருக்கும் உரிமை மற்றும் சம நேரத்திற்கு சம கூலி பெறும் உரிமையாவும் பெண்களுக்குண்டு. இது பெண்களுக்கான நேர்மறைப் பாகுபாடாகும். (இதன் மறுபுறம் பொதுவில் ஆண்கள் தமது உடல் வலுவைக் கொண்டு செய்யும் காரியங்கள் பெண்களது உழைப்பை விட சற்றே வித்தியாசப்படுகிறதென்பதும் எஞ்சிய கடின பணிகளை இன்று இயந்திரங்களே செய்துமுடிக்கின்றன என்பதும், ஆண் உடல் தொடர்பான பெருமிதக் கருத்தாக்கங்களே பெண்களது உடல் வலிமையை மிகவும் சிறுமைபடுத்தி சித்தரிக்கின்றன என்பதும் கவனிக்கத் தக்கது).

யுத்தங்களின் போதும் இயற்கை அனர்த்தங்களின் போதும் பாதுகாப்பு, முதலுதவி போன்றன பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் ஆகியோருக்கு முதலில் வழங்குவதன் காரணம் இப்பிரிவினரின் சார்ந்திருக்கும் சமூக நிலையினாலாகும். இப்பிரிவினருக்கான இந்நேர்மறைப் பாகுபாடானது உலகளாவிய அளவில் ஒரு மனிதஉரிமைக் கடமையாகவே ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. பொதுவான மனித உரிமைச் சட்டத்தாலும் சமூக அளவிலும் ஏற்புடையதாயிருக்கும் பெண்களுக்கான இந்நேர்மறைப் பாகுபாட்டை நாம் பெண்களின் சமூக மேம்பாட்டையும் சமூக சமத்துவத்தையும் இலக்காகக் கொண்டு, பெண்கள் எவ்வெவ் தளங்களில் அடக்கப்படுகின்றனரோ அவ்வனைத்துத் தளங்களிலும் கடைபிடிக்க வேண்டுமென வலியுறுத்துகிறோம்.

சட்டங்களும் சமூக நீதிகளும் கூட ஆண்களால் ஆண்களுக்கு சார்பாக உருவாக்கப்பட்டிருக்கையில் இவற்றை பெண்களுக்கெதிராகப் பிரயோகிப்பதும் கூட கேள்விக்குள்ளாக்கப்பட வேண்டும். பெண்களின் சமூக ரீதியான அடக்கப்பட்ட நிலை, பொருளாதார ரீதியாக சார்ந்திருக்கும் நிலை, ஒப்பீட்டளவிலான பலவீன உடல் நிலை காரணமாக பெண்களுக்கு வழங்கப்படும் தண்டனைகள் தொடர்பாகவும் நேர்மறைப் பாகுபாடு காட்டப்பட வேண்டும்.

பெண்கள் சமத்துவமாக நடாத்தப்பட வேண்டுமென்பதில் தீவிரமாயிருக்கும் சில பெண்ணியவாத பிரிவினர் பெண்களுக்கான நேர்மறைப் பாகுபாட்டை நிராகரிக்கின்றனர். இதன் மூலம் பெண்களான நாமே நமக்கு விசேட சலுகைகளை எதிர்பார்ப்பதன் மூலம் எம்மை ஆண்களிலும் வேறுபட்டவர்களாக - கீழானவர்களாக்கிக் கொள்ளும் காரியத்தில் ஈடுபடுகிறோம் என்பதே அவர்களின் தர்க்கமாகும். இத்தகைய வாதம் கூடுதலாக ஐரோப்பிய வாழ்வுமுறையுடன் பிணைந்த பெண்ணியவாதிகளிடமிருந்து வெளிப்படுகிறது.

ஐரோப்பிய சமூக அமைப்பில் பெண்கள் தொடர்பாக நிலவும் விக்டோரியன் கருத்தாக்கமானது பெண்களை மென்மையானவர்களாகவும் மிருதுவானவர்களாகவும் சித்தரிப்பதன் ஊடாக பெண்களை தொடர்ந்தும் இயலாமை நிலையில் கட்டிப்போட முயல்கிறது. இது ஒரு நாகரிகமாக மேட்டுக்குடியினரிடம் மாத்திரமன்றி சாதாரண மக்கள் மத்தியிலும் தாக்கம் செலுத்துவதாயுள்ளது. பெண்களுக்கு ஆண்கள் காரில் ஏற கதவை திறந்துவிடுவது, ஆசனங்களை வழங்குவது, விருந்தின் போது மதுக் கோப்பையைஎடுத்துக் கொடுப்பது போன்ற அற்பத்தனமான உபசரிப்புகளின் ஊடாக பெண்கள் பலவீனமானவர்கள், எதற்கும் தம்மை சார்ந்திருப்பவர்கள் என ஆண்களை கர்வம் கொள்ளச் செய்யும் வகையிலான ஒரு வாழ்வியல்-முறையை தக்கவைக்கும் சிந்தனை முறைமையை அங்கு அவதானிக்கக் கூடியதாயுள்ளது. இந்த விக்டோரியன் பாணி ஆணாதிக்க பெருந்தன்மையை (patronizing) ஐரோப்பிய பெண்ணியவாதி-

(தொடர்ச்சி 07இல்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யுத்தத்தின் இயங்கியல்

கடந்த இரண்டு தசாப்தங்களாக, சிறிலங்கா அரசு நம்மீது ஒரு திட்டவட்டமான ஆக்கிரமிப்பு யுத்தத்தை மேற்கொண்டு வருகின்றது. பல பத்தாயிரக் கணக்கான படையினரையும், நவீன ஆயுதங்களையும் கொண்டு, சிறிலங்கா அரசு இந்த யுத்தத்தை திட்டமிட்ட ரீதியில் வளர்த்து செல்கின்றது. நாட்டின் வருமானத்தில் கால்பங்கு அளவிலான தொகையை நம்மீதான யுத்தத்திற்கு செலவிட்டு வருகின்றது. இவ்வாறு சிறிலங்கா அரசானது பாரிய செலவுகளையும், மனித அழிவுகளையும் எதிர்கொண்டு, எம்மீது இத்தனை கொடிய யுத்தத்தை தொடர்வதற்கு காரணம் என்ன?

தமிழ் அரசியல்வாதிகளும், தமிழ் புத்திஜீவிகள் மற்றும் தமிழ் ஊடகவியலாளர்கள் சிலரும் சிறிலங்கா அரசானது தேர்தல் மற்றும் அகநெருக்கடிகளை சமாளிப்பதற்காகவே யுத்தத்தை தீவிரப்படுத்துகிறது எனும் கருத்தை வெளிப்படுத்துவதுடன் தாமும் அதை அவ்வாறே நம்புகின்றனர். இது யுத்தத்தின் அடிப்படையையே முற்றாக மறைத்து விடுகிறது. ஒரே வார்த்தையில் குறிப்போமாயின், சிறிலங்கா அரசு பின்பற்றி வருகின்ற ஆக்கிரமிப்பு அரசியலின் - இன அழிப்பு கொள்கையின் தொடர்ச்சியே இந்த யுத்தம். எனவே சிறிலங்கா அரசு இந்த யுத்தத்தை முன்னெடுக்கின்ற முறையை புரிந்து கொள்வதற்கு, அதன் ஆக்கிரமிப்பு அரசியலை தீர்மானிக்கின்ற பல்வேறு காரணிகளை பரிசீலிப்பது அவசியமாகின்றது.

சிறிலங்கா அரசு பின்பற்றுகின்ற ஆக்கிரமிப்பு அரசியலை தீர்மானிக்கின்ற காரணிகள் எவை?

1. தமிழீழத்தின் வளங்களை கொள்ளையடிப்பதில், சிங்கள ஆளும்பிரிவினர் கொண்டிருக்கின்ற ஆர்வம், தமிழீழத்தின் பரந்து, விரிந்த கடல்வளமும், கனிப்பொருள் படுக்கைகளும், வளமான விவசாய நிலங்களும் இவற்றுடன் தொடர்பான தொழில்துறை, போக்குவரத்து, மற்றும் வங்கித்துறைகளும் இப்பிரிவினருக்கு பாரிய அள்வில் செல்வத்தை திரட்ட உதவுகின்றன.
2. பல்லாயிரக்கணக்காண பிக்குகள் இறுக்கமாக நிறுவனப்படுத்தப்பட்டிருகின்ற பௌத்த அமைப்புகளினாலும், சிங்கள மக்கள் மத்தியில் செயல்படுகின்ற சமூக, அரசியல் மற்றும் கலாசார நிறுவனங்களினாலும் பிரயோகிக்கப்படுகின்ற இனவாத அழுத்தங்கள்.
3. சிறிலங்கா அரசுக்கும் , சிங்கள தேசத்திறகும் இடையே நிலைநாட்டப்பட்டு வந்திருக்கின்ற உறுதியான இணைப்பு. எந்தவொரு அரசும் தடையின்றி இயங்குவதற்கு, தனது ஆதிக்கத்தின் கீழுள்ள மக்களில் பெரும்பாலானோரின் ஆதரவை(அல்லது எதிர்ப்பின்மையை) பெற்று கொள்வது அவசியமாகின்றது. அரசுக்கும், சிவில் சமூகத்திற்கும் இடையிலான இத்தகைய இணைப்பு, வெவ்வேறு வழிமுறைகளின் மூலம் உருவாக்கப்படுகின்றது. இங்கு சிறிலங்கா அரசை பொறுத்தவரை, அது எண்ணிக்கையில் பெரும்பான்மையான சிங்கள மக்களை, தனது முழுமையான ஆதரவு சக்தியாக கருதி, செயற்பட்டு வருகின்றது. அது இங்கு வாழ்கின்ற அனைத்து சமூகங்களையும் தனது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருப்பதற்கு, நாட்டின் சனத்தொகையில் ஏறக்குறைய முக்கால் பங்கினரான சிங்கள மக்களின் ஆதரவு போதுமானதாகவும், அவசியமானதாகவும் கருதி, தன்னை சிங்கள அரசாக வெளிப்படுத்தி வந்திருக்கின்றது.
4. இவ்வாறு சிறிலங்கா அரசு, தனது இருப்பையும், தொடர்ச்சியையும் பேணுவதற்கு சிங்கள மக்களின் ஆதரவில் முற்றாக தங்கியிருப்பதால், இங்குள்ள ஏனைய சமூகங்களை அடக்கி வைப்பதும், அவற்றின் தனித்துவங்களை அழிப்பதும், இச்சமூகங்களை அரசியல் ரீதியில் பலமற்றதாக்குவதும் அதாவது இவற்றை அரசின் மையத்திலிருந்து விலக்கி வைப்பதும் அவசியமாகின்றது.
5. இவற்றோடு, சிறிலங்கா அரசை நேரடியாக கட்டுப்படுத்துகின்ற சிங்கள அரசியல்வாதிகள், பாதுகாப்பு, நிதி மற்றும் நிர்வாகத்துறை சார்ந்த பிரிவினர் மத்தியில் நிலவுகின்ற இனவெறுப்பும், ஆதிக்க மனோபாவமும்.
6. இவ்வாறு பல காரணிகளின் இணைவினால், இவற்றுக்கிடையிலான ஐக்கியம் மற்றும் முரண்பாடு என்பவற்றினால் சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்பு அரசியல் தீர்மானிக்கப்படுகின்றது. கடந்த இருதசாப்தங்களாக, இந்த ஆக்கிரமிப்பு அரசியலானது, பிரதானமாக யுத்தம் என்ற வடிவத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், யுத்தத்தை சூழ்ந்து உருவாகின்ற புதிய நலன்களும் (உதாரணமாக, ஆயுதங்கள், உணவு, உடை, ஏனைய தளபாடங்கள், மருத்துவம், என்பவற்றின் விநியோகம், போக்குவரத்து,.. என) அதிகாரங்களும், செல்வத்திரட்சியும் மறுதலையாக, இந்த யுத்தத்தை தொடர்ந்தும் நீடிக்கச் செய்கின்ற இயங்கு விசைகளாக மாறியிருக்கின்றன. உள் நாட்டுப் பிரிவினர் மட்டுமன்றி, சர்வதேச ரீதியிலும் பல்வேறு பிரிவினர் இந்த யுத்தத்தின் மூலம் பிரமாண்டமான அளவில் செல்வத்தை திரட்டி வருகின்றார்கள்.

எனவே, சிறிலங்கா அரசு எம்மீது திணித்துள்ள ஆக்கிரமிப்பு யுத்தத்தின் தீவிரத்தை தீர்மானிக்கின்ற உந்துசக்தியை கண்டு கொள்வதற்கு, மேற்படி காரணிகள் அனைத்தையும் பரிசீலிப்பது அவசியமாகின்றது. இதற்குமாறாக, அவ்வப்போது இடம்பெறுகின்ற தேர்தல்களையோ, அல்லது அரசாங்கத்திற்கு ஏற்படுகின்ற சில நெருக்கடிகளையோ காரணமாக வலியுறுத்துவது, சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்பு அரசியல் குறித்தும், அதன் இன்றைய யுத்த வடிவம் குறித்தும் கொண்டிருக்கின்ற அறியாமையை வெளிப்படுத்துவதாக அமைகின்றது. அத்தோடு முக்கியமாக, சிறிலங்கா படைகளின் தாக்குதல்களினால், நாள்தோறும் எமது மக்களுக்கு ஏற்படுகின்ற அழிவுகள் மற்றும் சிதைவுகள் குறித்த அக்கறையின்மையை வெளிப்படுத்துவதாகவும் அமைகின்றது. ஒரு உண்மையை மறக்காதிருப்போம்:- சிறிலங்கா படைகளின் ஆக்கிரமிப்பிற்குட்படாத பிரதேசங்களில் வாழ்கின்ற நமது மக்கள் ஒவ்வொருநாளும் தமது உயிர்வாழ்வுக்காக போராடிக் கொண்டிருக்கிறார்கள். சிறிலங்காவில் தேர்தல் நடக்காதபோதோ அல்லது சிறிலங்கா அரசாங்கத்திற்கு நெருக்கடிகள் ஏற்படாத சந்தர்பங்களிலோ அவர்கள் நிம்மதியாக வாழ்கிறார்க்ள் என்று சொல்வது ஒரு அபத்தமான கூற்றாக இல்லையா?

ஆட்சியிலுள்ள அரசாங்கம், தேர்தல்களில் வெற்றிபெற்றுவிட வேண்டும் என்பதற்காக கோடிக்கணக்கான ரூபாய்கள் பெறுமதியான ஆயுதங்கள் பயன்படுத்தப்படுகின்றன, நூற்றுக் கணக்கான மனித உயிர்கள் பலியாக்கப்பட்டு வருகின்றன என்று நாம் நம்பி கொண்டிருக்கப் போகின்றோமா? களத்தில் இறங்க தயாராக நிற்கும் சிறிலங்கா படையினர் மத்தியில், தேர்தலில் அரசாங்கத்தை வெற்றி பெறச் செய்வதற்காக, அல்லது அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியிலிருந்து அதை பாதுகாப்பதற்காக உங்கள் உயிர்களை அர்ப்பணிப்பு செய்யுங்கள் என்ற வீரஉரை நிகழ்த்தப்படுகின்றது என்று எண்ணுகின்றோமா? குறித்த ஒரு தேர்தலில் அரசாங்கம் வெற்றிபெற்றுவிட வேண்டும் எனபதற்காகவே, சர்வதேச ஆதிக்க சக்திகள் அனைத்து உதவிகளையும், அலோசனைகளையும் வழங்கி, யுத்தத்தில் சிறிலங்கா படைகளை வெற்றிபெற செய்ய முயற்சிக்கிறார்கள் என்று கருதிக் கொண்டிருக்க போகின்றோமா?

சிறிலங்கா அரசு, மிக அடிக்கடி யுத்தத்தை தீவிரப்படுத்துவதற்கு உந்து விசையாகவுள்ள உண்மையான காரணிகள் மீது நமது அக்கறையை குவிப்போம். தேர்தல்களில் வெற்றி பெறுவதற்காக அல்ல, மாறாக தேர்தல்களில் வெற்றி பெற்ற பின்னரே, எம்மீதான வன்முறை தாக்குதல்களும், யுத்தமும் முன்பைவிட தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வந்திருக்கின்றன. சுதந்திரத்தின் பின்னரான தேர்தல் அனுபவங்களும், கடந்த இரண்டு தசாப்தகால யுத்த அனுபவங்களும் எமக்கு உணர்த்துவது இதைத்தான். யுத்தத்திற்கு எதிராக தீவிரமான, வெளிப்படையான பிரச்சாரத்தை மேற்கொண்டு, தமிழ் மக்களின் பூரண ஆதரவுடன் வெற்றி பெற்ற சந்திரிகாவின் இன்றைய யுத்த ஆர்வத்திற்கு என்ன தர்க்கத்தை முன்வைக்க போகின்றோம்.?

எனவே நாம் தெளிவாக இருப்போம்: நமது தேசிய உரிமைகளையும், இறைமையையும் அழித்து, தனது ஆதிக்கத்தின் கீழ், தொடர்ந்தும் எம்மை அடக்கி வைப்பதற்கு சிறிலங்கா அரசு கொண்டிருக்கின்ற மூர்க்கத்தனமான ஆர்வமே, இந்த யுத்தத்திற்கான அடிப்படை காரணம். சிறிலங்கா அரசு எம்மீது தொடுத்துள்ள ஆக்கிரமிப்பு யுத்தமானது, அதன் ஆக்கிரமிப்பு அரசியலின் நீட்சியே. எனவே சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்பு அரசியலை உள்ளார்ந்து இயக்குகின்ற காரணிகளே, இந்த யுத்தத்தையும், அதன் தீவிரத்தையும் தீர்மானிக்கின்றனவே தவிர, தேர்தலில் வெ-

(தொடர்ச்சி 2இல்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ரஷ்யப்புரட்சியும் தேசங்களின்சுயநிர்ணயமும்

1917ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 17ம் திகதி (புதிய நாட்காட்டியின் படி நவம்பர் 07ம் திகதி) ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது. ஆயிரக்கணக்கான உழைக்கும் மக்களினதும் பல நூறு கம்யூனிஸ்ட்டுப் புரட்சியாளர்களினதும் உன்னதமான உயிர்த்தியாகத்தின் மூலம் நிகழ்ந்தேறிய இப்புரட்சியானது அதற்குப் பின்வரும் மனித குலத்திற்கு பாரிய படிப்பினைகளுக்கு வழிவெட்டியுள்ளது.

தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் சக்திகள் எனும் வகையில், போல்ஷ்விக் கட்சியானது தேசிய இனங்கள் தொடர்பாக எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டிருந்தது? சோவியத் யூனியன் ஸ்தாபிதத்திற்கும் போல்ஷவிக் கட்சியின் சுயநிர்ணயக் கொள்கைக்குமிடையிலான உறவுகள் என்ன?... என்பவற்றை விவாதிப்பதானது வரலாற்றிலிருந்து நாமும் கற்றுக் கொள்வதற்கு கதவுகளைத் திறந்துவிடும்.

வெற்றி பெற்ற போல்ஷ்விக் புரட்சியின் முதற்கட்ட நடவடிக்கை பல்வேறு தேசங்களையும் இணைத்து குடியரசுகளின் ஒன்றியமான சோவியத் ஒன்றியத்தை உருவாக்கியதுமாகும். இது பாட்டாளிவர்க்க ஆட்சிக்கு அரசியல்ஸ்திரத்தன்மை வழங்குவதாகக் கருதப்பட்டது. ஒரு நாட்டில், ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திற்குள் சோசலிசத்தை பரீட்சித்துப் பார்ப்பதிலும் விட பல தேசங்களை ஒன்றிணைத்து பரந்த பிரதேசத்தை மையப்படுத்தி சோசலிச அரசை ஸ்தாபிப்பது ஒருபுறம் எதிரிகளிடமிருந்து பாட்டாளி வர்க்க அரசை பாதுகாத்துக் கொள்வதற்கான அடிப்படைப்பலத்தைத் தரும். மறுபுறம் விரிவான மக்கள் சமூகமொன்று சோசலிச வாழ்வை நோக்கி முன்னேற வழிவகுக்கும். இந்த அடிப்படை நோக்குடனேயே போல்ஷ்விக் கட்சி தேசங்களின் கூட்டமைப்பான சோவியத் ஒன்றியத்திற்கு அதிக முக்கியத்துவம் வழங்கியது.

ரஷ்யாவை ஆண்ட மன்னர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த மேற்கு மற்றும் மத்திய ஆசிய நாடுகள், பால்கன் நாடுகள் உட்பட சில கிழக்கைரோப்பிய நாடுகள் ரஷ்யப்பேரரசுக்கு உட்பட்ட நாடுகளாகவே கருதப்பட்டு வந்தன. மகா பீற்றர் போன்ற சர்வாதிகாரிகளால் தோற்றுவிக்கப்பட்டிருந்த மாரஷ்ய வாதம் ரஷ்ய பேரரசுக்குட்பட்டிருந்த தேசங்களின் சுயநிர்ணயத்தை, இறைமையை விழுங்கிவிட்டிருந்தது. அனைத்து அபிவிருத்திகளும் ரஷ்யாவை மையப்படுத்தியே மேற்கொள்ளப்பட்டன. ஏனைய தேசங்களின் வளர்ச்சியில் அக்கறை செலுத்தப்படவில்லை. ரஷ்யப் பேரரசுக்கு வரிகட்டுவதும், ரஷ்ய பேரரசர்களின் படையில் நிர்ப்பந்தமாக இணைக்கப்பட்டு பலிகடாக்களாக யுத்தங்களுக்கு அனுப்பப்படுவதுமே ஏனைய தேசங்களுக்கான தலைவிதியாயிருந்தது. கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியைக் கைப்பற்றிய போது இத்தேசங்களின் கூட்டமைப்பில் முழு அளவில் மாற்றங்கள் நிகழவில்லை. பேச்சுவார்த்தைகளினடிப்படையில் மூன்று பால்கன்நாடுகள்பிரிந்து செல்ல அனுமதிக்கப்பட்டன. எனினும் முடிந்தவரையில் பேரரசுக்குட்பட்டிருந்த நாடுகளை தொடர்ந்தும் இணைத்து வைத்திருப்பதிலேயே கம்யூனிஸ்ட் கட்சி ஆர்வமாயிருந்தது. தேசங்களின் வாழ்வைப் பொறுத்தவரையில் ரஷ்யப் பேரரசு எனும் பெயருக்குப் பதில் சோவியத் ஒன்றியம் எனும் பெயர்மாற்றம் நடைபெற்றது.

ரஷ்யப் பேரரசர்கள் தமது ஆக்கிரமிப்புக் குட்பட்ட பிரதேசங்கள் சுதந்திரமாகப்பிரிந்து செல்வதை எவ்வாறு அடக்கி வந்தனரோ அதன் இன்னொரு வடிவமாக புரட்சியின்நலன்களைப்பாதுகாப்பதற்காக அகன்றசோவியத்யூனியன் அவசியம் எனும் உணர்வு முன்னோடிப் புரட்சியாளர்கள் பலரிடமும் ஆழமாகக் காணப்பட்டது. பிரிந்து போய்தனியரசு அமைக்க வேண்டும் எனக் கோரிய தேசங்களையும், அத்தேசங்களைப் பிரதிநிதித்துவப் படுத்திய கம்யூனிஸ்ட்டுகளையும் போல்ஷ்விக்குகள் எதிர்ப்புரட்சியாளர்களாகவேக் கருதினர். ஜார்ஜியக்குடியரசுமீதான செஞ்சேனையின் படையெடுப்பை எதிர்ப்புரட்சிகர சக்திகளை நசுக்கிடும் நடவடிக்கையாகக் காட்டப்பட்டாலும், அது ஜார்ஜிய சுயநிர்ணய உரிமைக்கெதிரான ஆக்கிரமிப்பு நடவடிக்கை என்பதே உண்மையாகும். இதன் பின்னால் மாரஷ்யவாதம் செயற்பட்டது புரிந்துகொள்ளக் கூடியதே. இப்படையெடுப்பை சுயநிர்ணயக் கொள்கைக்கு எதிரானதென்றும் மாரஷ்ய சிந்தனையின் வெளிப்பாடென்றும் லெனின் கடுமையாக கண்டித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.



இவ்வாறு சுயநிர்ணயம் கோரிய தேசங்களின் மீது ஆக்கிரமிப்புப் போர் தொடுத்ததன் மூலமும், அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய கட்சிகளை தடை செய்ததன்மூலமும் புரட்சியின்நலன் எனும் பெயரில் கம்யூனிஸ்ட் கட்சியானது தான் வகுத்த சுயநிர்ணயக்கொள்கைக்கு தானே எதிரானதாக செயற்பட்டது.

இதன் விளைவு தேசங்களின் சமத்துவமான கூட்டமைப்பு எனும்போர்வையில் சக தேசங்கள் மீதான அடக்குமுறை நடைபெற்றதும் தேசிய முரண்பாடு கூர்மையடையத் தொடங்கியதுமாகும். பொருளாதாரக் காரணங்கள், பூகோளக் காரணங்கள், மற்றும் வளப் பகிர்வு காரணங்களால் குடியரசுகளுக்கிடையே (சோவியத்துகள்) பிரச்சினைகள் வளர்ச்சி பெறத் தொடங்கின. கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் அரசும் பிரச்சினையின் மூலத்தைக்காணத்தவறிவிட்டன. தேசங்களாக சோவியத் அரசு தகர்ந்த போது, ஒன்றியத்திலிருந்த குடியரசுகள் தனியரசுகளாக பிரிந்து செல்லும்நிகழ்வு நடந்தேறியது.

சோசலிசத்தை விட மக்களுக்கு தேசியம் பெரிதாகிவிட்டதா என நாம் எம்மையே கேட்டுக்கொள்வோம். சோசலிசம் மக்களின் ஒருவகை தேவைகளைப் பூர்த்தி செய்வதென்றால் தேசியம் இன்னொருவகைத் தேவைகளைப்பூர்த்தி செய்கிறது. இவ்விரண்டும் இணைந்திருக்கும்பொழுதே மக்கள்வாழ்வில் மலர்ச்சி இருக்க முடியும். ஒன்றை நசுக்கிக் கொண்டு இன்னொன்றின் கை ஓங்குமானால் அங்கு சமூகமானது நோய்க் கூறுகளால் பீடிக்கப்படுவதே நடைபெறும். சோவியத் ஒன்றியத்தின் மக்கள் சோசலிச சமூக வாழ்வை அனுபவித்தார்களா என்பதை ஆய்வது நமது நோக்கமல்ல. ஆனால் அவர்கள் தேசியவாழ்வில்திருப்தியாயிருக்கவில்லை என்பதை வரலாறு நிரூபித்துவிட்டது.

20ம் நூற்றாண்டின் முதன்முறையாக வெற்றிபெற்ற புரட்சியின் தலைவர்கள் சோசலிசம் என்பதை மாத்திரமே கருத்திற் கொண்டிருந்தனர். இதற்குமப்பால் மக்களின் தேசியத் தேவைகள் எவ்வாறு இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதைக் காணத் தவறிவிட்டனர். தேசியத்தை சோசலிசத்திற்கு உட்பட்டு செயற்படும் ஒன்றாக அவர்கள் குறுக்கிப் பார்த்தனர். தேசியம் என்பது சோசலிசத்தையும் மீறி வெளிப்படுமளவுக்கு தனித்துவமான பண்புகளைக் கொண்டுள்ளது எனும் உண்மையை அவர்கள் புரிந்து கொண்டிருப்பார்களானால் உலக சோசலிசத்தின் வரலாறு வேறு விதமாக எழுதப்பட வாய்ப்பிருந்திருக்கும்.

முதலாளித்துவ அரசுகளுடன் ஒப்பிடுகையில் சோவியத் அரசு சோவியத் ஒன்றியத்திலுள்ள தேசங்களின் தனித்துவமான வளர்ச்சிக்கு ஒப்பீட்டளவில் உறுதுணையாயிருந்துள்ளது. 1917இல் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியைக் கைப்பற்றுகையில் ரஷ்ய பேரரசுக்குட்பட்டிருந்த மத்திய ஆசியாவின் சில மக்கள் சமூகங்கள் நாடோடி வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். சில மக்கள் சமூகங்களது மொழிக்கு எழுத்து வடிவம் இருக்கவில்லை. கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான சோவியத் ஆட்சி இம்மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது என்பது மறுக்க முடியாத உண்மை. மக்கள் தேசமாக உருப்பெறுவதற்கும் தேசிய விழிப்புணர்வைப் பெறுவதற்கும் எழுத்து வடிவமுடைய மொழி, கல்வி, கலாச்சார வாழ்வியல் முறையில் அபிவிருத்தி என்பன பிரதான பங்காற்றுகின்றன. எழுத்து வடிவத்தைக் கொண்டிருக்கும் மொழியும் கல்வியும் அரசியல் விழிப்புணர்வுக்கு அடிப்படையாகும். சோவியத் அரசுக்குட்பட்ட தேசங்கள் பல தேசிய விழிப்புணர்வைப் பெறுவதற்கு கம்யூனிஸ்ட் கட்சி தேசிய இனங்களின் வளர்ச்சிக்கு அளித்த முக்கியத்துவமும் சமூக அபிவிருத்திக் கொள்கையும் காரணமாகும் என்பது ரஷ்ய புரட்சியின் விளைவுகளை ஆய்வு செய்த பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

தேச விடுதலைப்போராட்டத்திலீடுபட்டிருக்கும் ஈழத் தமிழரான நாமும் ரஷ்யப் புரட்சியின் வரலாற்றிலிருந்தும் உலக வரலாற்றிலிருந்தும் கற்றுக்கொள்வோம். நமது தாயகத்தில்வாழும்சக தேசம்மற்றும் சமூகங்களின் சுயநிர்ணயம் தொடர்பாக நாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் எனும் படிப்பினையை சுவீகரித்துக் கொள்வோம்.

தேசிய வாழ்வை அனுபவிக்கும் உரிமையை இழந்த மக்கள் சமூகங்கள் சோசலிசத்தில் வெற்றி பெற்றதில்லை. அதேபோல் சோசலிசத்தை இலக்காகக் கொள்ளாத தேசிய சமூகங்கள் அதன் உண்மையான அர்த்தத்தில் சுதந்திரமான தேசிய சமூகங்களாக இல்லை. தேசியமும் சோசலிசமும் சமூக அக அடக்குமுறைகளுக்கெதிரான போராட்டமும் அவற்றிற்குரிய முக்கியத்துவத்துடன் இணைக்கப்பட்டு முன்னெடுக்கப்படும் பொழுதே மக்களது வாழ்வு முழுமை பெறுகிறது. ரஷ்யப்புரட்சியின்வரலாறு நமக்கு ஆழமாக உணர்த்தி நிற்கும் படிப்பினை இதுவே.

சோசலிசம் என்பது மானுட வாழ்வில் ஓர் உயரிய கட்டமாகும். தமிழீழ மக்களான நாமும் இந்தக் கட்டத்தை அடைவதை நமது மானுட இலட்சியமாகக் கொள்ள வேண்டும். ஆனால் அதை அடைவதில் நாம் வகுக்கும் மூலோபாயமே அதன் வெற்றியை அல்லது தோல்வியை நிர்ணயிப்பதாயிருக்கும்.

ரஷ்யப்புரட்சி வெற்றிபெற்ற இம்மாதத்தில் புரட்சியைத் தலைமைதாங்கிய தலைவர்களையும், புரட்சியாளர்களையும், புரட்சியை நடாத்தி முடித்த மக்களையும் பெருமதிப்புடன் நினைவுகூர்வதுடன் ரஷ்யப் புரட்சியின் அனுபவங்களிலிருந்து நாமும் கற்றுக்கொள்வோம். ★



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பெண்கள்... (4ஆம் பக்கத் தொடர்ச்சி)

களைப் போன்றே நாமும் வெறுக்கிறோம்.

இதன் மறுபுறம் நம்மைப்போன்ற வறுமைப்பட்ட தென்னாசிய சமூக அமைப்பில் பெரும்பான்மைப் பெண்களின் வாழ்வியலானது முற்றிலும் இவ்விக்டோரியன் பாணி கருத்தாகத்திற்கு நேரெதிரானதாக உள்ளது. பெண்களை சேவகியாக வைத்திருக்க முயலும் - குறிப்பாக வளங்கள் வாய்ப்புகள் அரிதாயுள்ள - நமது சமூகங்களில் கல்வியற்ற, கலாச்சார கட்டுக்களால் பின்னப்பட்ட, பொருளாதார சார்ந்திருப்புக்குள்ளாகியிருக்கும் பெண்களுக்கு நேர்மறைப் பாகுபாடு அவசியமாகும். நமது தேசத்தில் யுத்தத்தின் அவலங்களுக்குள்ளாகி வாழ்வின் விளிம்பிற்கே தள்ளப்பட்டிருக்கும் பெண்களது விடுதலை என்பது இவர்களின் வாழ்வில் கூடுதல் கவனத்தைக் குவிப்பதன் மூலமே சாத்தியப்படும்.

பெண்களுக்கான இந்நேர்மறைப் பாகுபாடானது ஒரு மாறுங்கட்டத்திற் குரியதாகும். சமூக ரீதியாக அனைத்துத் தளங்களிலும் தாம் சமத்துவத்தை அனுபவிப்பதாக உணர்கையில், சமூக - பொருளாதார - அரசியல் ஆளுமையைப் பெறுகையில் பெண்கள் தாமே இந்நேர்மறைப் பாகுபாட்டை நிராகரிப்பர். இவ்வகையில் நேர்மறைப் பாகுபாடு என்பது பெண்களது வாழ்வில் கடந்து செல்லும் கட்டத்திற்குரியதாகும்.

தமிழீழப் பெண்களான எமது இன்றைய கட்ட வாழ்வியல் முறையில் நேர்மறைப் பாகுபாடு கடைபிடிக்கப்படுவதானது எமது வாழ்க்கைத் தரத்தை, ஆளுமையை, தலைமைத்துவப் பண்பை உயர்த்திக் கொள்வதற்கு அவசியமென நாம் உணர்கிறோம். நமது தேசத்தின் விடுதலைக்காகப் போராடும் சக்திகள் பெண்களுக்கும் அடக்கப்பட்ட சமூகப்பிரிவினருக்குமான நேர்மறைப் பாகுபாடு தொடர்பாக அக்கறைகொள்வதும் இது தொடர்பான விழிப்புணர்வை சமூக அளவில் தற்போதிருந்தே ஏற்படுத்திடுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியதும் அவசியமாகும். ★

## தமிழகத்தில்... (1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்திற்கு புறம்பான குறுக்குவழி நடவடிக்கைகளில் ஈடுபடவும் பணத்திற்காக தமக்கு தகவல் வழங்கக் கூடிய கையாட்களையும் ஏஜென்டுகளையும் அமர்த்திக் கொள்ளவும் செய்கின்றன. எரிக் விவகாரத்தில் தமிழக உளவுத் துறையானது சிறிலங்கா உளவுத் துறையின் கையாளாக செயற்பட்டுள்ளதா எனும் சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது. இந்த சம்பவத்தை தமிழக ஊடகங்களில் கூட வெளிவர முடியாத வகையில் மிகவும் இரகசியமாகவும் துரிதமாகவும் தமிழக உளவுத்துறை செய்து முடித்துள்ளது. இது பற்றி அறிந்த பின்னரும் தமிழக அரசு விசாரணைகள் மேற்கொள்ளாதிருப்பது மேலும் கவனத்திற்குரிய தொன்றாகும். இந்திய அரசின் கீழ் ஊழல்கள் மலிந்து கிடப்பது யாரும் அறிந்ததே. 80களின் நடுப்பகுதியில் இந்திய உளவுத்துறையில் பணியாற்றி வந்த ஒருவர் தமிழகத்திலிருந்த ஈழவிடுதலை போராட்ட அமைப்புகள் பற்றி சி.ஐ.ஏ. வுக்கு தகவல்களை வழங்கியதும், இத்தகவல் சிறிலங்கா உளவுத் துறைக்கு தரப்பட்டதும் கடந்த காலத்திலும் நிகழ்ந்துள்ளது. தற்போது இது நபர்களை கையளிக்குமளவுக்கு வளர்ச்சி பெற்றுள்ளது. இந்த குறுக்குவழி, நலன்சார் அரசியல் சூழலுக்குள் நமது போராட்டத்தை எவ்வாறு கொண்டுநடத்தப் போகிறோம் என்பதில் தெளிவான பாதைகளை வகுத்துக்கொள்ள வேண்டியதே நமது தெரிவாயிருக்கட்டும். ★

# இளம் தீமோர் குடியரசை வாழ்த்துவோம் . . . .!!!!

நமது சமகாலத்தில் ஒரு தேசம் விடுதலையடைந்ததும் தனக்கான அரசை ஸ்தாபிப்பதும் நமக்கும் நம்மைப் போன்றே போராடிக் கொண்டிருக்கும் மக்களுக்கும் கிடைக்கப் பெற்றிருக்கும் நம்பிக்கையின் ஒளிக்கீற்றாகும். நாமும் போராட வேண்டும், விடுதலையடைய வேண்டும் எனும் மன வலிமையை கிழக்கு தீமோர் விடுதலை அடக்கப்பட்ட ஒவ்வொரு தேசத்தினதும் மனதில் ஆழப்பதிப்பதாயுள்ளது.

மக்களது விடுதலைப் போராட்டத்திற்கு தலைமை தாங்கும் அமைப்பு, போராட்டத்தை முன்னோக்கி நகர்த்தக் கூடிய பல்வேறு போராட்ட வழிமுறைகளையும்கைக்கொள்ள வேண்டுமென்பதற்கு தீமோர் விடுதலை முன்னணி நல்லதொரு உதாரணமாயுள்ளது. தீமோர் விடுதலை முன்னணியின் இந்த விரிவான தளத்திலமைந்த போராட்டப் பார்வையே அப்போராட்டத்திற்கு வெற்றியை ஈட்டித் தந்தது. விடுதலை அமைப்பென்றால் துப்பாக்கி முனையில்தான் அதிகாரத்தைக்கைப்பற்ற வேண்டும் எனும் சுத்த இராணுவ மனோபாவத்திற்கு மாறாக, போராட்டத்தில்மக்களது முக்கியத்துவத்தையும்மக்களது பல்வேறு வடிவங்களிலான போராட்ட வழிமுறைகளையும் உள்ளடக்கி செழுமை மிக்க போராட்டமாக பரிணமித்ததனாலேயே தீமோர் விடுதலை முன்னணியால் வெற்றியின் இலக்கை அடைய முடிந்தது.

தீமோரில் தேர்தல் இந்தோனேசிய அரசின் நல்லெண்ணத்தினால் நடைபெற்றதொன்றல்ல. தீமோர் மக்களின் நீண்டகால ஆயுதப் போராட்டம் மற்றும் வெகுஜனப் போராட்டங்களின் வலிமையே இந்தோனேசிய அரசை தீமோரில்தேர்தல்நடாத்தும் நிலைப்பாட்டை எடுக்க நிர்ப்பந்தித்த சக்தியாகும். மக்கள்தமது அடிப்படை ஜனநாயக உரிமைகளிலொன்றான வாக்களிக்கும் உரிமையைப்பிரயோகித்து தமது அரசியல்தலைவிதியை தாமே நிர்ணயிததனர். தீமோர் குடியரசுக்காக மக்கள் கொண்டிருந்த வேட்கையை அதற்கு மேலும் எதேச்சாதிகார இந்தோனேசிய அரசால் நசுக்க முடியாது போயிற்று. எத்தகைய கொடுங்கோண்மை அரசும்மக்கள் தீர்ப்பின் முன்னால் பணிந்து வர வேண்டும் என்பதை தீமோர் விடுதலை உலக வரலாற்றில் மீள உறுதி செய்கிறது. தமது விடுதலையை நிர்ணயிப்பதில் தேர்தலை பயன்படுத்துமளவுக்கு போராட்ட வழிமுறையில்நெகிழ்ச்சியான சிந்தனையைக் கொண்டிருந்த தீமோர் விடுதலை முன்னணியினதும் மக்களினதும் அரசியல்முதிர்ச்சியை இதில் நாம் அவதானிக்க முடிகிறது.

ஆயுதம் தாங்கி போராடும் அமைப்பு தேர்தலின்மூலம் வெற்றியை ஈட்டிக்கொள்ள முடியும். அதன் மறுபுறம் ஆயுதம் தாங்கிய மக்கள் போராட்டங்கள் இன்றி அடக்குமுறையாளர்கள் தாமாக முன்வந்து மக்களுக்கு விடுதலை வழங்கமாட்டார்கள் என்பதும் மறுக்க முடியாத உண்மை. தமக்கான பலமான போராட்ட அமைப்பையும் படையையும் கொண்டிருந்ததனாலேயே தீமோர் மக்கள் துணிகரமாக தேர்தலில் இறங்கவும்பாராளுமன்ற வழிமுறைக்கூடாகவே எதிரி அரசுடன் அரசியல் முடிவுகளுக்கு வரவும் முடிந்தது. இது தான் நாம் தீமோர் மக்களிடமிருந்து சுவீகரித்து கொள்ள வேண்டிய படிப்பினையாகும்.

"ஜனநாயகமான" (?) வழிமுறை மூலம் அரசியல் தீர்வுக்கு வரவேண்டுமென தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு உபதேசம் செய்யும்சிலர், முதலில்போராட்டம் கைவிடப்பட்டு போராளிகள் ஆயுதத்தைக் களைந்து நிராயுதபாணிகளாக வேண்டும்எனும்கருத்துகளை முன்வைத்து வருகின்றனர். நமது தேசத்தின் நிலையில் இவர்களின் "இவ்வறிவுரைகள்"

எத்தனை அபாயகரமானவை. நாம் போராட்டத்தைக் கைவிட்டு நிராயுதபாணிகளானால் எம்மால் எப்படி எதிரிக்கு எதிராக அழுத்தத்தைப் பிரயோகிக்க முடியும்?

நமது போராட்டம் பல்வேறு தளங்களிலும் பரிணமித்து பல்வேறு வடிவங்களிலுமான மக்கள் போராட்டமாக கிளைபரப்ப வேண்டுமென்பதில்நாம்பிரக்ஞையாயிருக்கும் அதே நேரம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இராணுவத் தரத்தை ஒரு போதும் எதிரிக்கு முன்னிலையில் குறைத்துக் கொள்ளாதிருப்பதிலும் விழிப்பாயிருப்போம். தீமோர் விடுதலை நமக்கும் உலகெங்கிலும்போராடிக்கொண்டிருக்கும் மக்களுக்கும் கூறும் செய்தி இதுவே!

விடுதலை பெற்ற தீமோர் மக்களின் மகிழ்ச்சியில் தமிழீழ மக்களான நாமும் இணைவோம் !! இளம் தீமோர் குடியரசை தேசமாக இணைந்து வாழ்த்துவோம் !!! ★

## தமிழீழத்... (8ஆம் பக்கத் தொடர்ச்சி)

...கவே அறிவித்துக் கொண்டு இந்திய அரசின் அச்சுறுத்தலுக்கெல்லாம் சவால் விட்டபடி தொடர்ச்சியாக பங்களிப்பு செய்து வரும் இவர்களின் உயர்வான சர்வ தேசிய உணர்வை நாம் கௌரவிக்க வேண்டும். இவர்களின் பங்களிப்பை நமது தேசம் என்றும் பெருமதிப்புடன் நினைவுகூறும்.

ஈழப் போராட்டத்திற்கு ஆதரவு வேண்டி கடந்த காலத்தில் விடுதலை அமைப்புகள் இந்திய அரசுடனும் பொது நீரோட்டத்திலுள்ள அரசியல் கட்சிகளுடனும் உறவுகளை ஏற்படுத்திக் கொண்டனர். அவர்களோ ஈழப் போராட்டத்தைப் பயன்படுத்தி தமக்கு அரசியல் லாபம் தேடிக் கொண்டதுடன் ஈற்றில் தாமே நேரடி எதிரிகளாகவும் மாறினர். இந்த கசப்பான அனுபவங்களின்மூலம்படிப்பினைகளைப் பெற்றிருக்கும் நாம் இந்திய ஆதிக்கப் பிரிவுகளுடனான அரசியல் உறவுக்கு நிரந்தர முற்றுப் புள்ளி வைப்போம். நமது போராட்டம்சார் அரசியல்உறவுகளை புதிய தளங்களில் ஏற்படுத்துவோம். தமிழக மக்கள் மத்தியில் செயற்படும் வெகுஜன அமைப்புகள், போராட்ட அமைப்புகள், புரட்சிகர, முற்போக்கு, ஜனநாயக குழுக்களுடன் தாபன ரீதியான அரசியல்உறவுகளை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது. தமிழக மக்களது வாழ்வுடன்பின்ணிப்பிணைந்து வேரோடிப் போயிருக்கும் அமைப்புகளுடன் பலமான அரசியல் உறவுகளை கட்டியெழுப்பி அவர்களுடன் தொடர்ச்சியான செயற்பாடுகளை பேணுவதன் மூலம் எம்மால் தமிழகத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கான நிரந்தர ஆதரவுத் தளத்தை கட்டியமைக்க முடியும். ★



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தமிழீழம்

'The Editor'
BM Box 4002
London. WC1N 3XX
United Kingdom

www.thamileelam.org

# தேர்தலை எதிரிக்கெதிரான ஆயுதமாக்குவோம். . . .!!!

சிறிலங்காவில் ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரங்களுக்கான தயாரிப்புகள் ஆரம்பமாகிவிட்டன. வழமைபோல் அரசியல் கட்சிகளும் மக்களை ஏமாற்றும் தமது "வாக்குறுதி"ப் பிரச்சாரங்களை தொடங்கிவிட்டன. சிறிலங்காவின் இரு பிரதான பேரினவாத அரசியல் கட்சிகளான பொதுசன ஐக்கிய முன்னணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகளான சந்திரிக்காவும் ரணிலும் முன்வைக்கும் "வாக்குறுதி"களில் எமது கவனத்தை ஈர்ப்பது "சமாதானம்" எனும் சொல்லாகும்.

16 ஆண்டுகால இன அழிப்பு யுத்த வரலாற்றில் இவ்விரு கட்சிகளும் "சமாதானம்" எனும் சொல்லை சிங்கள தேச அரசியலின் குறிப்பான கட்டங்களில் மிகவும் தாராளமாகவே பாவித்து வருகின்றன. இதன் மூலம் சிங்கள மக்களின் ஆதரவை வென்றுகொள்ள முயல்கின்றன. என்ன அர்த்தத்தில் சிங்கள தேசம் சமாதானத்தை விரும்புகிறது? சிங்கள தேசம் இவ்யுத்தத்தால் எவ்வகையில் பாதிக்கப்படுகிறது. . ? எனும் கேள்விகள் எம்முன் எழுகின்றன. பெருமளவு சிங்கள இளைஞர்கள் யுத்தத்தினால் மரணிப்பதும் அங்கவீனமாவதும் சிங்கள தேசத்தை நேரடியாக பாதிக்கிறது. மேலும், யுத்தத்தின் தொடர்ச்சியாக சிறிலங்காவில் மேற்கொள்ளப்படும் குண்டு வெடிப்புகளாலும் சிங்கள தேசம் அச்சவுணர்வுக்கு ஆட்பட்டுள்ளது. அத்துடன் யுத்த செலவினங்களால் சிங்கள தேசத்தின் நடுத்தர பிரிவினரும், பெரும்பான்மையான கீழ்தட்டு வாழ்நிலையிலுள்ள பிரிவினரும் பாதிப்புக்குள்ளாகின்றனர். இக்காரணங்களினால் சிங்கள தேசம் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்படுவதை, அதாவது தனது நலனில் இருந்து முடிவுக்கு கொண்டுவருவதை விரும்புகிறது. யுத்தத்தின் முடிவானது, சிங்கள அரசு தமிழர்களின் தேசவிடுதலைப் போராட்டத்தை முற்றிலும் அழித்தொழிப்பதாயிருக்க வேண்டும்: அப்பொழுதே தாம் "நிரந்தர அமைதி"யை அனுபவிக்க முடியும் என்பதிலும் சிங்கள தேசம் உறுதியாயுள்ளது. சிங்களத் தேசத்தின் இவ்வுணர்வுகளைத் தான் "சமாதானம்" எனும் குறிப்பால், அவ்வப்போது சிங்களத் தலைவர்கள் வெளிப்படுத்துகின்றனர்.

1995ம் ஆண்டு ஜூசமாதானத்திற்கானஜி யுத்தத்தை சந்திரிக்கா முன்னெடுத்தபோது சிங்கள தேசமே ஓரணி திரண்டதிலிருந்து இவ்வுணர்வுகளின் ஆழத்தை நாம் புரிந்துகொள்ள முடியும். அரசு தமிழர்களுக்கு தீர்வு வழங்கப்போவதாக பாவனை செய்கையில் தீவிர பேரினவாத சக்திகள் எதிர்ப்பதை சாக்காகக் கொண்டு அரசானது போரைத் தொடர்ச்சியாக நடத்தி வருகிறது.

இவையாவும் சிங்கள அரசியலில் ஈழத்தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்களது உரிமைக்குரல் வெளிப்படுவதற்கான வழிகள் முற்றிலும் அடைக்கப்பட்டிருப்பதையே நமக்கு உணர்த்தி நிற்கிறது. இந்நிலையில் சிறிலங்காவில் நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் ஈழத்தமிழர்களான நமது பாத்திரம் என்ன?

தமிழீழ மக்களான நம்மைப் பொறுத்தவரையில் நாம் சிறிலங்காத் தேர்தலுடன் எவ்விதத்திலும் சம்பந்தப்பட்டவர்கள் அல்ல. அது முற்றிலும் எமது அண்டை நாட்டின் அரசியல் விவகாரமாகும். இன்று சிறிலங்கா அரசானது எமக்கான தனியரசை நிறுவ விடாது எம்மீது அடக்குமுறையை பிரயோகித்து வருவதன் காரணமாக தவிர்க்க முடியாது நாமும் அதன் அரச கட்டமைப்பிற்கு உட்பட்டிருக்கிறோம். இவ்வகையில் சிறிலங்காவில் நடக்கப் போகும் ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள அரசின் பலத்தை சிதைக்கும் வகையிலும் எமது பலத்தையும் நலன்களையும் பலப்படுத்திக் கொள்ளும் வகையிலும் நாமும் நமது வாக்குரிமையை பிரயோகிக்க வேண்டும்.

தமிழ் தேசத்தை சிறிலங்கா பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப் படுத்தக் கூடிய நேர்மையான அரசியல் தலைமை கிடையாதெனும் உண்மையையும் வாக்களிக்கும் உரிமையைப் போல வாக்களிக்காது பகிஸ்கரிக்கும் உரிமையும் நமக்கு உள்ளது என்பதை மனதில் குறித்துக்கொண்டு, கீழ்வரும் முடிவுகளை எமது தேசம் மேற்கொள்ள வேண்டும். இந்த வகையில்,

1. இத்தேர்தலில் வாக்களிக்காது பகிஸ்கரிப்போம்!

2. வாக்களிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருப்பின், வாக்கைச் செல்லுபடியற்றதாக்கி வாக்குப் பெட்டிகளை நிரப்புவோம்.

இதன் மூலம், ஈழத்தமிழரால் பகிஸ்கரிக்கப்படும் அல்லது செல்லுபடியற்றதாக்கப்படும் நமது வாக்குகளின் மொத்த எண்ணிக்கையானது, ஈழத்தமிழர் சிங்கள அரசின் பிரஜைகளாக அல்லாது இறைமை கொண்ட தமிழீழக் குடியரசின் பிரஜைகளாக இருக்க விரும்புவதையும் எமது தேசத்தின் ஐக்கியத்தை உறுதிப்படுத்திக் கொள்வதாகவும் இன்னும் சர்வதேச சமூகத்திற்கு இதனை வெளிப்படுத்துவதாகவும் நிச்சயம் அமையும்.

ஆசிரியர் குழு- தமிழீழம்

15. 11. 99

## தமிழீழத்தில் (3ம் பக்கத் தொடர்ச்சி )

விடுதலைப்போராட்டத்தின்பாலான தமிழக மக்களின் இந்த உயிர்த்துடிப்பான பிணைப்பிற்கு - ஒத்துழைப்பிற்கு நாம் மீள புத்துயிரூட்டிட வேண்டும். வெறுமனே மொழி ரீதியான உணர்வலைகளால் மாத்திரமல்ல நமது போராட்டத்தின் நியாயத்தன்மையை அவர்கள் புரிந்தேற்று அதனடிப்படையில் நமக்கு ஆதரவு வழங்கும் வகையில் நமது போராட்டம் தொடர்பான அரசியல் பிரச்சாரத்தை தமிழகத்தில் விரிவான தளத்தில் மேற்கொள்ள வேண்டும். தமது விடுதலைக்காகப் போரிட்டுக் கொண்டிருக்கும் தேசங்களுக்கு உரிமையுடன் அணுகி தமக்கான ஆதரவைப் பெற்றுக்கொள்ளத்தக்க சக தேசங்கள் கிடைப்பது மிகவும் அரிதாகும். தமிழக மக்களின் ஆதரவு என்பது வரலாற்றில் ஈழத்தமிழருக்கு கிடைக்கப்பெற்றிருக்கும் அரியதொரு வரப்பிரசாதமாகும். அதைப் பாதுகாத்து வளர்த்தெடுப்பது நமது சாதுரியமான அரசியலையே சார்ந்துள்ளது.

மரண தண்டனை வழங்குவதையே சட்டத்திலிருந்து நீக்க வேண்டுமென சர்வதேச அளவில் மனித உரிமை அமைப்புகளால் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டுவரும் இன்றைய சூழலில், ராஜிவ் மரணத்துடன் தொடர்புபட்டதாகக் கூறப்படும் இந்நால்வருக்கும் விதிக்கப்பட்டிருக்கும் மரண தண்டனைக்கெதிராக இந்திய மனித உரிமை அமைப்புகளோ அல்லது சர்வதேச மனித உரிமை அமைப்புகளோ வீச்சமாகக் குரல் கொடுக்காதிருப்பதன் காரணம் இந்திய அரசானது ராஜிவ் மரணமானது அரசியல் அடிப்படையிலமைந்த தண்டனை என்பதை உலகின் பார்வையிலிருந்து மறைத்து அதை ஒரு பயங்கரவாத நடவடிக்கையாக மாற்றியுள்ளதை இம்மனித உரிமைப்பிரிவினரும் நம்பவே செய்கின்றனர். குறிப்பாக சர்வதேச அளவிலான எந்தப் பிரச்சினைக்கும் முன்னின்று குரல் கொடுக்கும் சர்வதேச மனித உரிமை அமைப்புகள் இந்திய அரசியலில் முனைப்புப் பெற்றிருக்கும் இப்பிரச்சினைக்கு அழுத்தம் கொடுக்காததன் காரணம் இதுவே.

ராஜிவ் மரணத்தையொட்டி இந்திய அரசியல் சூழலில் ஈழப் போராட்டத்திற்கெதிராக உருவாகியிருக்கும் இச்சிக்கலான நிலைமைகளிலும் ஈழப்போராட்டத்திற்காக துணிகரமாக செயற்படும் சகோதர, சகோதரிகளும் சில அமைப்புகளும் தமிழகத்தில் இயங்கி வருவது நமக்கு நம்பிக்கையூட்டுவதாயுள்ளது. தம்மை ஈழப்போராட்டத்தின் ஆதரவாளர்களாக பகிரங்கமா

(தொடர்ச்சி 07இல்)

## மக்கள் களம்

இன்றைய காலகட்டத்தில் தமிழீழம் போன்ற பத்திரிகையில் வருகின்ற கருத்துக்களும் செய்திகளும் தமிழீழப் போராட்ட வரலாற்றை மீண்டும் ஒரு முறை திரும்பிப் பார்த்து சரியான திசையில் வழி நடத்த அணிதிரளுமாறு கோருகின்றது. புதிய புதிய கருத்துக்களையும் உலகத்தில் ஏற்படுகின்ற புதிய மாற்றங்கள் பற்றிய செய்திகளை இனிவரும் தமிழீழத்தில் எதிர்பார்க்கின்றோம்.

ராஜி - அன்புவெளிபுரம்

இதுவரை தமிழீழப் போராட்டத்தில் நிகழ்ந்த தவறுகளை வெளிக் கொண்டு வருவதுடன் அதை ஆய்வுக்கு உட்படுத்தி அடிப்படையில் தேசிய விடுதலையுடன் சமூக விடுதலையும் முன் எடுக்கின்ற ஓர் புரட்சிகர மாற்று அரசியல் தலைமையென நான் இதுவரைக்கும் பார்த்த பத்திரிகைகள் (1-4 மட்டும்) கூறுகின்றன. அவ்வாறாயின் தமிழீழம் பத்திரிகை முழுமையாக தேசிய கருத்துக்களை கொண்ட பத்திரிகையாக இல்லாமல் சமூக விடுதலைக் கருத்துக்களை-மார்க்ஸிய கருத்துக்களை இனிவரும் தமிழீழத்தில் எதிர்பார்க்கிறேன்.

தர்மு - கைதடி

மாணிக்கதாசனின் மரணம் பற்றிய தலைப்புச் செய்திக் குறிப்பில் புரட்சிகர அரசியலைவிட உணர்ச்சிகள் மேலோன்றியிருப்பதாகத் தோன்றுகின்றது. செய்திக் குறிப்பின் உள்ளடக்கம் எதார்த்தம் ஆயினும், உங்கள் எழுத்துப் பண்புத்தரத்தை கவனித்துக் கொள்ளுங்கள்.

மரியதாஸ் - வவுனியா

இலண்டன் தொடர்புகட்கு:
BM BOX 6769
LONDON
WC1 3XX
TEL: 07041372064

கனடா தொடர்புகட்கு:
300 BOROUGHDR
PO BOX 47032
SCARBOROUGH
ONTARIO M1P 4ZP



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்